egistered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

உங்களுடைய அன்றாட பாவனைக்கு
திறம்
கே. ஆர். லிங்கன்ஸ்
காப்பித்தூள், மிளகாய்த்தூள்
புதிய முறையில் தயாரிக்கப்பெற்றது
—— யாழ்ப்பாணம் பஜார் ஏஜண்ட் ——
எம். பரராசசிங்கம்
சேலம் பீடி ஏஜண்ட்ஸ்,
யாழ்ப்பாணம்.

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற் பெட்டி: எண் 49

மலர் 6 யாழ்ப்பாணம் சோபகிருது பங்குனி 15 ஆம் நாள் துல்கஃதா 13 (28-3-64) சனிக்கிழமை இதழ் 47

# பிரதமர் ஸ்ரீமாவை எஸ்.ஜே.வி சந்திப்பார்

## தூதர்கள் மகாநாடு அடுத்த வாரமும் நீடிக்கலாம்

### மந்திரிகள் கட்ட மகாநாடு: இன்று முடிவு தெரியும்

கொழும்பு, வெள்ளி

தற்பொழுது கொழும்பில் நடைபெறும் நடுநிலைமை நாடுகளின் தூதர்கள் மகாநாடு அடுத்த வாரமும் தொடர்ந்து நடைபெறலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது. நாளை சனிக்கிழமை மகாநாடு கூடும்பொழுது சில தீர்மானங்கள் நிறைவேற்றப் படாவிட்டால், மகாநாடு எதிர்வரும் திங்கட்கிழமையும், புதன்கிழமையும் கூடுமென்று நம்பகரமான வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

முக்கியமான விஷயங்களுக்கு இன்னும் விரிவாகத் தீர்வு காணப்படாததால் முன்னர் குறிப்பிட்ட காலஎல்லைக்குள் மகாநாடு முடிவடையாதென்றும், மகாநாடு மேலும் சில தினங்களுக்குத் தொடர்ந்து நடைபெறலாமென்றும் கருதப்படுகிறது.

இதனுடன் மகாநாட்டில்

(6-ம் பக்கம் பார்க்க)

## தமிழ் ஊழியர்களை பாதிக்கும் உத்தரவை தற்காலிகமாக நிறுத்துமாறு கோருவார்

நல்லூர், சனி

தமிழ்பேசும் அரசாங்க ஊழியர்களை எதிர்நோக்கியுள்ள முக்கிய பிரச்சினைகள் குறித்து பிரதமருடன் மிக விரைவில் பேச்சுகள் நடத்தப்போவதாகத் தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அறிவித்துள்ளார்.

பிரதம மந்திரி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவைத் தமிழ் ஊழியர் விஷயமாகச் சந்தித்து தமிழ் அரசாங்க ஊழியர்களைப் பாதிக்கக்கூடிய வகையில் தற்போது பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவுகளைத் தற்காலிகமாக வேனும் நிறுத்திவைக்கும்படி தாம் கோரப்போவதாக திரு. செல்வநாயகம் நேற்று மாலை தெரிவித்தார்.

நேற்றுயாழ்ப்பாணம்வந்துள்ள காங்கேசன் துறை எம். பி.யும் தமிழரசுக் கட்சித் தலைவருமான திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் வடபகுதியில் உள்ள பல அரசாங்க ஊழியர்களைச் சந்தித்து நிலைமை பற்றி உரையாடினர். காங்கேசன் துறை பட்டினசபை மண்டபத்தில் நேற்று மாலை திரு. செல்வநாயகம் தொழிற் சங்கப் பிரமுகர்கள் பலருடன் நடத்திய ஆலோசனையின் முடிவில் பிரதம மந்திரியைச் சந்திப்பதென திரு. செல்வநாயகம் அறிவித்தார். மொழிப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் நல்லநோக்கு அரசாங்கத்துக்கு இருக்குமானால் மொழிப்பிரச்சினை பற்றி இறுதி முடிவு செய்யப்படும் வரையாவது தமிழ் அரசாங்க ஊழியர்களுக்குச் சிங்களத் தேர்ச்சி, கட்டாய ஓய்வு உத்தரவுகளை ரத்துச்செய்யுமாறு கோரப்போவதாகவும் அவர் தெரிவித்தார்.

## சுவாமிகளின் அஸ்தி

யாழ்ப்பாணம், சனி

யோக சுவாமிகளின் அஸ்தி குடத்தில் வைக்கப்பட்டு அவரது ஆசிரமத்தில் வைத்து இப்பொழுது பூசை செய்யப்பட்டு வருகிறது.

## ஸ்ரீ இராமாயண பட்டாபிஷேக விழா

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தில் நேற்று ஸ்ரீ இராமாயண பட்டாபிஷேக அரங்கேற்று விழா சிறப்பாக நடைபெற்றது.

திரு. கே. பி. ஹரன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் புலோலி பண்டித வித்துவான் மு. வே. பாலசுந்தரம், மாவிட்டபுரம் ஸ்ரீ வே. த. மயில்வாகனம், பிரமஸ்ரீ சீதாராம சாஸ்திரியார் முதலியோர் திரு. முத்துத்தம்பி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்கள்.

விசேஷ அபிஷேக ஆராதனைகளும் தேவஸ்தான பஜனை கோஷ்டியினரின் ஸ்ரீராமபஜனையும் இடம்பெற்றன

### இன்று

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி கோவில் பூங்காவனத் திருவிழா மாலை மாற்றி வீதி வலம்-மாலை 5-00க்கு. திருக்கல்யாணம் இரவு 8-00க்கு மாலை 6-30 மணியளவில் திரு. வி. கே. ஆறுமுகம் "பார்வதி திருமணம்" வில்லுப்பாட்டு நிகழ்த்துவார்.

# கார் திருட்டுக்கோஷ்டி அம்பலம்!

## தலைவரும் மற்றும் இருவரும் கைது

### பழைய பொலிஸ்காரர் தலைமறைவு

யாழ்ப்பாணம், சனி

கடந்த சில மாதங்களாக யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்த மோட்டார் கார் திருட்டுக் கோஷ்டியை யாழ்ப்பாணம் பொலிசார் கண்டுபிடித்துள்ளனர். இக்கோஷ்டியின தலைவரும் மற்றும் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். இதே கோஷ்டியைச் சேர்ந்த முன்னாள் பொலிஸ்காரர் ஒருவர் தலைமறைவாகத் திரிவதாகவும் அவரைப் பொலிசார் தேடிவருவதாகவும் அறியப்படுகிறது. இக்கோஷ்டியினர் கைது செய்யப்பட்டபின் யாழ்ப்பாணப் பகுதியில் திருட்டுச் சம்பவங்கள் குறைந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இம்மாதம் 11-ம் திகதி நல்லூர் கந்தசாமி கோவிலுக்குச் சென்ற திரு. வி. சோமசுந்தரம் என்பவர் தமது மோட்டார் காரை வெளியில் நிறுத்திவிட்டு ஆலயத்துக்கு சுவாமி தரிசனம் செய்வதற்காகச் சென்றிருந்தார். சுவாமி தரிசனம் செய்துவிட்டு வெளியே வந்த திரு. சோமசுந்தரம் தமது மோட்டார் கார் அங்கு இல்லாததைக் கண்டு திகைப்படைந்தார். இது பற்றி யாழ்ப்பாணம் பொலிசாருக்குப் புகார் செய்யப்பட்டது.

இத்திருட்டுப் பற்றியும் மற்றும் சில திருட்டுக்கள் பற்றியும் புகார் செய்யப்பட்டதைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் பொலிசைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் கனகசிங்கம், சார்ஜன்ட் சுப்பிரமணியத்தினதும் சுன்னாகம் பொலிசாரி

(6-ம் பக்கம் பார்க்க)

## முன்னாள் இலங்கை கவர்னர் மரணம்

கேப்டவுன், மார்ச் 27

இலங்கையின் முதலாவது கவர்னர் ஜெனரல் திரு. ஹன்றி மாங்க்மேசன்மூர் கேப்டவுனில் காலமானார். அவருக்கு வயது 77. இவர் கென்யாவிலும் ஸீராலியோனிலும் கவர்னராகப் பதவி வகித்த பின் கேப்டவுனில் தமது வாசஸ்தலத்தைக் கொண்டிருந்தார். இலங்கை சுதந்திரமடைந்த போது இலங்கை கவர்னராக அவர் பதவிவகித்தார்.

## 45 லட்சம் தொழிலாளர் வேலைநிறுத்தம்

டோக்கியோ, மார்ச் 27

ஜப்பானின் பல பகுதிகளிலும் இன்று 45 லட்சம் தொழிலாளர்கள் சம்பள விஷயமாக வேலை நிறுத்தம்செய்தனர். இந்த வேலை நிறுத்தத்தை இரு பெரும் தொழிற்சங்கங்கள் ஒழுங்கு செய்திருந்தன. 40 துறைமுகங்களில் இன்று வேலை நடைபெறவில்லை.

உங்கள் கட்டிடங்கள்
உறுதியாக இருப்பதற்கு
திறமான
★ இரும்புச் சாமான்களும்
★ பெயின்டுவகைகளும்
★ அஸ்பஸ் சீட்டுகளும்
★ மர வகைகளும்
எம்மிடம்
பெற்றுக் கொள்ளலாம்
விஷ்ணு
ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
வல்வெட்டித்துறை

## கைத்தொழில் சுவீப் முடிவுகள்

கொழும்பு, வெள்ளி

நேற்று இழுக்கப்பட்ட கைத்தொழில் சுவீப்பின் 34-வது சீட்டிழுப்பு முடிவுகள் வருமாறு:-

முதற்பரிசு
15 H 0713 ரூபா 17,730
2-வது பரிசு
15 F 0562 ரூபா 7,075
3-வது பரிசு
16 F 0534 ரூபா 3,525

(5-ம் பக்கம் பார்க்க)

# இடதுசாரி கூட்டு அரசாங்க முயற்சி?

கொழும்பு, வெள்ளி

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்துடன் இடதுசாரி ஐக்கிய முன்னணியின் மூன்று கட்சிகளையும் சேர்த்து இடதுசாரி கூட்டு அரசாங்கம் அமைக்கும் முயற்சி நடைபெற்றுக் கொண்டிருப்பதாக அறியப்படுகிறது.

பொதுவான ஒரு கொள்கைத் திட்டத்தின் கீழ் கூட்டு அரசாங்கம் அமைப்பது பற்றிப் பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதாகவும் இந்த முயற்சிக்கு இடதுசாரி ஐக்கிய முன்னணிக் கட்சிகளுக்குள் கருத்து வேற்றுமை நிலவுவதாகவும் கூறப்படுகிறது.

கூட்டு அரசாங்கம் அமைப்பதற்கு லங்கா சமசமாஜக் கட்சியைச் சேர்ந்தவர்கள் பலர் விரும்பவில்லையென்றும் கூறப்படுகிறது.

லங்கா சமசமாஜக் கட்சி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு ஆதரவளிப்பதை சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த பிரபல தொழிற்சங்க வாதிகள் தொடர்ந்தும் எதிர்த்துவருவார்களென்றும் இதனால் அடுத்த மாதமளவில் இக்கட்சிக்குள் நெருக்கடி அதிகரிக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

கலப்பு அரசாங்கம் ஏற்படுமானால் இடதுசாரிகளுக்கு

(6 ம் பக்கம் பார்க்க)

### இன்வாக்கு

கடவுளிடம் நமக்கு அன்பு உள்ளதா என்பதை நாம் தெரிந்துகொள்ளுவது கஷ்டம். அண்டை அயலாரிடம் நமக்கு அன்பு அதிகரிப்பின், கடவுளிடம் நமக்கு அன்பு அதிகரிக்கிறதென்பதற்கு அது திட்டமான ஓர் அறிகுறியாகும்.

—தெரிஸா ஞானி

ஈழநாடு
EELA NADU
EELA NADU National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389
யாழ்ப்பாணம்சோபகிருதுஆண்டு
பங்குனி மீ 15 உ. (28-3-64)

## படித்த வேலையற்றோர் பிரச்னை

நமது நாட்டில் 8000 சிரேஷ்ட பாடசாலைகள் இருக்கின்றன. மூன்று பல்கலைக்கழகங்களும் முப்பதுக்கு மேற்பட்ட உயர் கல்விப் பீடங்களும் இருக்கின்றன. வருடாவருடம் 67,000 மாணவர் சிரேஷ்ட பாடசாலைக் கல்வியை முடித்து வெளியேறி வேலை தேடுகின்றனர். ஆண்டுதோறும் 900 பட்டதாரிகள் வெளியேறுகின்றனர். இவர்களின் எதிர்காலம் என்ன? இந்த நாட்டிலுள்ள சிந்திக்கும் ஆற்றல் படைத்த ஒவ்வொருவரும் சிந்திக்கவேண்டும் என்று கலாநிதி சு. வித்தியானந்தன் சமீபத்தில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரிப் பரிசளிப்பு விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

கல்வி கற்கும் மாணவர்களை பல பல பிரச்னைகள் எதிர்நோக்கியிருக்கின்றன. ஆண்டுதோறும் பாடசாலைகளை விட்டு வெளியேறும் ஆயிரக்கணக்கான மாணவர்கள் வேலை தேடியலைகின்றனர். மாணவரின் தொகைக்கேற்ப நாட்டின் பொருளாதாரம் அபிவிருத்தி அடையவில்லை. படித்து வெளியேறும் பல்லாயிரக்கணக்கான இளைஞர்களிடம் ஆற்றல் இல்லாமலில்லை. எமது நாட்டில் இயற்கை மூலப் பொருள்வளமும் இல்லாமலில்லை. ஆனால் மனித ஆற்றல்களை விருத்தி செய்து இயற்கை மூலவளங்களைச் சரியான முறையில் பயன்படுத்த தகுந்த திட்டம் வகுத்து செயல்படுத்தாவிட்டால் ஆற்றலிருந்தும் வளம் இருந்தும் பயனில்லை.

அந்நியர் தமது ஆட்சிக் காலத்தில், தமது வசதிக்கேற்ற கல்வி முறையைக் கொண்டு வந்து அவர்களது பண்பாட்டையும் சமயத்தையும் புகுத்தினர். எமது பண்பாட்டையும் கல்வியையும் வளம்படுத்துவதற்காக ஆங்கிலேயருடைய ஆட்சியை அகற்றுவதற்கு சிங்களவரும் தமிழரும் ஒன்று சேர்ந்து உழைத்தனர். ஆனால் உரிமைபெற்றபின் தமிழர் கண்ட பலன் எதுவுமில்லை.

தேசிய நோக்கங்களை வகுத்தே கல்வித் திட்டங்களை அமைத்தல் வேண்டும். தேசிய கல்வித் திட்டம் பற்றி பலரும் கூறுகிறார்கள். வெள்ளையறிக்கையும் வெளி வந்தது. அதுவும் எல்லோருக்கும் திருப்தியளிப்பதாகத் தெரியவில்லை. திரு. வித்தியானந்தன் கூறுவதுபோல் கல்வி உலகு பெரும் குழப்பமான நிலையில் இருக்கின்றது. அரசியற் பலிபீடத்தில் கல்வித் திட்டங்கள் பலியிடப்படும் காலம் இது. மொழிப்பித்தும் சமய வெறியும் கல்வி உலகைக் கலக்குகின்றன.

தமிழ் மாணவர்களின் நிலையைத் தனியாக எடுத்துக் கூற வேண்டிய அவசியமில்லை. அவர்களின் எதிர்காலம் ஆபத்தானது; நிச்சயமற்றது.

மாணவர்கள் நாட்டின் எதிர்காலத் தலைவர்கள். இவர்களைச் சரியான முறையில் வழிகாட்ட வேண்டியது இன்றைய தலைவர்களது கடமை. கல்வி கற்கும் மாணவர்களது நிலையும், கல்வி கற்று வெளியேறி வேலைதேடும் இளைஞர்களது நிலையும், கல்வி கற்க இடமின்றிக் கஷ்டப்படும் மாணவர்களது நிலையும் ஒரு கட்சியினதோ ஒரு பிரிவினரதோ பொறுப்பு அல்ல. இவையும் தேசியப் பிரச்னை தான். தேசிய ரீதியில் இவற்றுக்குத் தீர்வு காணவேண்டும். அரசாங்கத்தை மட்டும் குறை கூறிப் பயன் இல்லை. எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் இப்பிரச்னை வளர்ந்து கொண்டேயிருக்கும். நாட்டிலுள்ள கல்விமான்களையும், அறிஞர்களையும், அரசியல் கட்சித் தலைவர்களையும் கொண்ட மகாநாடு ஒன்றைக் கூட்டி நாட்டுக்கேற்ற கல்வித் திட்டம் வகுக்க வேண்டும். இதன் மூலம் இப்பிரச்னைக்குத் தகுந்த தீர்வுகாண முயற்சி செய்யலாம். செய்வார்களா?

# தமிழ் மூச்சாய் வாழ்ந்த 'ஈழகேசரி' பொன்னையா

— இ. நாகராஜன் —



அகில பாரதமும் அதனை அண்டிய நாடுகளும், அந்நியரின் பிடிக்குள் அடிமையாகிக் கிடந்த காலமது. அந்தக் காலத்தின் இழிநிலையைப் போக்கிச் சுதந்திர உணர்ச்சியை ஊட்டி, மக்களைச் சுதந்திரப்பாதைக்கு இட்டுச் செல்ல பாரத நாட்டில் பல தியாகிகள், கவிஞர்கள் தோன்றினர்.

தமிழகத்தில் ஒலித்த குரல் கடல் கடந்து ஈழத்திலும் ஒலித்தது. அந்நியர் ஆதிக்கத்தின் கட்டுகளை அறுத்தெறிந்து சுதந்திர ஆட்சி காண முனைந்தனர். திருவளரும் ஈழத்தாய் தளையினின்று நீங்கிச் செம்மை மிகு சுதந்திரத்தின் வருகைக்கு வித்திட்ட வன்மையாளராக விளங்கியவர் சேர் பொன். இராமநாதன். தமிழர்-சிங்களவர் என்ற பேதமற்ற பொதுமையான தேசியக் கோட்பாட்டில் நின்று செயலாற்றிய இப்பெரியாரின் ஞாபகார்த்தமாகவே 'ஈழகேசரி'ப் பத்திரிகையை திரு. நா. பொன்னையா அவர்கள் தொடங்கினார்கள். 'தேமதுரத் தமிழோசை' திசையெட்டும் பரவ வேண்டுமென்ற பாரதியின் உணர்வு இவர் உளத்தில் பெருக்கெடுத்ததன் காரணமாகவே அன்றைய நிலையில் பல இடர்பாட்டுக்கிடையில் பத்திரிகையைத் தொடக்கினார்.

பழைமையைப் பேணி புதுமையில் வழி நடத்தும் கொள்கையை பத்திரிகைத்துறையில் மட்டுமல்ல, தமது சொந்த வாழ்க்கையிலும் அதே கருத்துக்கொண்டு விளங்கினார்.

மகான் காந்திஜியின் கொள்கைகளைப் பின்பற்றி இனம், மதம், சாதி ஆகிய வேறுபாடுகளற்ற பொதுமையான வாழ்வை நடந்துகாட்டி, அந்த வழியில் செல்லும் அரசியல் பிரமுகர்களுடன் தொடர்பு கொண்டு அவர்க்கும் உறுதுணையாக விளங்கினார். தேசிய உணர்ச்சியை அக்காலத்தில் ஊட்டி வளர்த்த பெரியார்கள் இளைஞர்களாக விளங்கிய காலகட்டத்தில் அவர்களுக்கு பலவாற்றாலும் திரு. பொன்னையா அவர்கள் ஊக்கும் கருவியாக நின்றதை அவர்கள் மிகப் பெருமையோடு சொல்லிக்கொள்கின்றனர். அரசியல் அரங்கில் அவர் மிகுந்த செல்வாக்குப் பெற்ற ஒருவராகத் திகழாதபோதிலும் அவரும் ஒரு சூத்திரதாரியாக விளங்கியதை மறுப்பதற்கில்லை.

திசையறி கருவிஎப்போதும் ஆடி அசைந்து திசைகளைக் காட்டிக்கொண்டிருந்தாலும் அதற்குரிய வடக்குத் திசையையே நிரந்தரமாக்கிக்கொள்வதுபோல பல வகையிலும் தனதுசெயலை விரிவு படுத்திக் கொண்டபோதிலும், தமிழைப் பேணிக் காப்பதிலேதான அவரது சிந்தையும் செயலும் ஒன்றுபட்டதை முழுமையான வாழ்க்கையில் காணுகின்றோம்.

சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்களுக்குப் பின்னர் தொல்காப்பியத்தைச் சிறந்த முறையில் வெளியிடவல்ல அறிஞர் யாழ்ப்பாணத்தில் உளரென்பதை இந்தியத் தமிழகம் அறிந்து கொள்ளக் கருவியாகவும், கர்த்தாவாகவும் விளங்கியவர் திரு. பொன்னையா அவர்களே. மகாவித்துவான் பிரம்மஸ்ரீ கணேசையர் அவர்கள் எழுதிய உரைவிளக்கக் குறிப்புக்களுடன் தொல்காப்பியத்தைப் பதிப்பித்தார்கள். இதனால் தொல்காப்பியத்தைப் பதிப்பித்த பெருமையோடு பிரமஸ்ரீ. கணேசையரின் மேதா விலாசத்தைநாடே அறிந்து கொள்ளும் வாய்ப்பையும் உண்டாக்கினார். இவரது சேவையை, தொல்காப்பியத்தைப் பதிப்பித்த பெருமையைப் பண்டிதமணி கணபதிப்பிள்ளையவர்கள் தாம் எழுதிய தொல்காப்பிய ஆராய்வுக் கட்டுரையிற் கூறியதை இங்கு குறிப்பிடுகின்றோம். "தொல்காப்பியம் சிதைந்து மறையும் காலத்தில் அதனைத்தேடி எடுத்து ஏந்திப் பரமோபகாரம் செய்த சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்கள் ஆதிவராகம் ஆயினார்கள். பிறகு தாமோதரம்பிள்ளை அவர்கள் எடுத்து ஏந்திய தொல்காப்பியம் மறைகிற சமயத்தில் நன்றி மறவாமல் அதனை எடுத்துத் தாங்கிப் பயன் படுமுறையில் உபகரித்த திரு நா. பொன்னையா அவர்கள் உத்தரவராகம் ஆயினார்கள்."

தமிழ் என்ற உணர்வூற்றின் முன்னே சகல பாகுபாடுகளையும் கடந்த உத்வேகம் இவரிடம் மிளிர்ந்ததை அறிஞர்கள் பலர் குறிப்பிட்ட குறிப்புக்களிற் காணக் கிடக்கின்றது. எவரிடம் பலனுள்ள பழைமையான நூல்கள் இருக்கின்றன என்று ஆராய்வதிலும் அவற்றை வெளியிடுவதிலும் குன்றாத ஆர்வம் கொண்டவராக மிளிர்ந்தார்.

வண. சுவாமி ஞானப்பிரகாசருடைய சொற்பிறப்பு ஒப்பியல் தமிழ், ஆங்கில அகராதியைப் பதிப்பித்தமையும், பன்னூற்றுக்கணக்கான பாடப்புத்தகங்களை பல அறிஞர்களைக் கொண்டு எழுதி அச்சிட்டமையும் அவரது தமிழ்த் தொண்டிற்கு அத்தாட்சி பூர்வமான சான்றுகளாகும்.

குரும்பசிட்டியின் பெயரைச் சொன்னதும் திரு. நா. பொன்னையா அவர்களின் ஞாபகம் எவர்க்கும் உடனே உண்டாகும். 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ்நாடு' என்று பாரதி, வள்ளுவனால் தமிழ் நாடு பெருமைப்படுகிறது என்று போற்றுவது போல பொன்னையா அவர்களை தமிழுலகுக்கு அளித்து அதனால் பெருமை கொண்டது குரும்பசிட்டி. 22-6-1892ல் இவர் பிறந்தார். தமது தாயகத்திலுள்ள ஆரம்பபாடசாலையில் கல்வி பயின்ற இவர் விவசாயத்தில் நாட்டங்கொள்ளாது, அக்காலத்திலிருந்து பத்திரிகைகள் படிப்பதிலும் அரசியல், தமிழறிவைத் தேடிக் கொள்வதிலும் ஆர்வம் கொண்டு அக்காலத்தில் வயாவிளான் திரு. க. வேலுப்பிள்ளை அவர்களால் நடத்தப்பட்டு வந்த 'சுதேச நாட்டியம்' என்னும் பத்திரிகாலயத்தில் அச்சுத் தொழில் பயின்றார். 1910-ம் ஆண்டு வரையில் களுத்துறையில் வியாபாரத்தில் ஈடுபட்ட இவர் 1918 ல் பர்மா சென்று அங்கு "சுதேசமித்திரன்" என்னும் பத்திரிகையில் உதவி ஆசிரியராகக் கடமையாற்றினார். அக்காலத்திலேயே இந்திய நாட்டில் கொழுந்துவிட்ட தேசிய உணர்ச்சி இவரிடமும் புகுந்தது. சென்னையில் சில காலம் வசிக்கநேர்ந்த போது கை. வி. வி. சங்கக் காரியதரிசி திரு. எஸ். இராசரத்தினம் அவர்களது சகோதரர் திரு. கதிரேசபிள்ளையவர்களுடன் சேர்ந்து தந்திச் சுருக்கெழுத்துத் திரட்டு என்னும் வியாபார தந்தி நூற் புத்தகமதை ஆக்குவதில் முக்கிய பங்கெடுத்துக்கொண்டார்.

1925 ல் ரங்கூனை விடுத்து தாய்நாடு திரும்பிய திரு. பொன்னையா அவர்கள் அக்காலத்தில் திரு. யேசுதாசன் என்பவரை அதிபராகக் கொண்டு விளங்கிய ஆமெரிக்

(5-ம் பக்கம் பார்க்க)

## ஐயாறன் எழுதுவது

வாலு போச்சு கத்தி வந்தது டும் டும் என்றுஒரு குரங்குக் கதையுண்டு. அதுபோல் இப்போது இலங்கை அரசியல் அரங்கிலே சர்வாதிகாரப் பூச்சாண்டி மறைந்து கூட்டு மந்திரிசபைப் பேச்சுகள் தலை தூக்கியுள்ளனவாம். அந்தமட்டில் இது நல்லதுதான்.

சர்வாதிகார ஆட்சி வந்தால் அது எதுவும் செய்யலாம். திடீரென நம்யாரையும் கைதுசெய்து அடைத்துவிடலாம். பத்திரிகைகளைத் தடுக்கலாம். இன்னும் மனம் போன போக்கில் நடக்கலாம். கேள்விமுறை இராது.

இதைவிட கூட்டு மந்திரிசபை ஏற்படுமாயின் அது ஜனநாயகத்துக்கு ஒத்ததே. அரசியல் சட்டதிட்டத்துக்கு உட்பட்டு, மக்களின் பிரதிநிதிகளுக்குப் பொறுப்பாக பார்லிமெண்ட்சபைமூலமே அது ஆட்சி நடத்த வேண்டி இருக்கும். ஆகையால் சர்வாதிகார ஆட்சியைவிட, கூட்டுமந்திரிசபை மேலானதாகுமென்பதை யாரும் மறுக்க முடியாது.

* * *

தேசிய அரசாங்கம் அதாவது எல்லா முக்கிய அரசியல் கட்சிகளும் ஒத்துழைக்கக் கூடிய ஓர் ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்றுசென்ற வாரம் ஒரு முக்கிய யோசனை அடிபட்டது. தேசிய நன்மையை முன்னிட்டு முக்கிய கட்சிகளெல்லாம் இதில் ஒத்துழைக்க முடிந்திருந்தால் எவ்வளவோ மேலாக இருந்திருக்கும். தியாகசிந்தனையுடன் பரஸ்பரம் விட்டுக் கொடுத்தாலே இது சாத்தியமாகும். ஆனால் தேசநன்மையைவிட கட்சி நன்மையையே அதிகம் மதிப்பதாயின் இது கைகூடுவது முடியாது. எப்படியும் சர்வாதிகார ஆட்சி ஏற்படுவதைத் தடுக்க வேண்டுமென்பதே பொதுமக்களின் கருத்தாகும்.

ஆனால் இன்றைய பல தேசிய பிரச்னைகளையும் தீர்க்க இப்போதுள்ள அரசாங்கத்தால் முடியாதென்பது வரவர அதிக தெளிவாகி வருகிறது. இன்றைய பிரச்னைகளில் பல, இந்த அரசாங்கத்தின் சிருஷ்டியேயாகும். இதை அரசாங்கக்கட்சியினர் நன்கு உணர்ந்ததின் பயனாகவே தேசிய அரசாங்கத்தையோ சேர முடியாவிட்டால் ஒரு அட்டு அரசாங்கத்தையோ கூமைக்க வேண்டுமென்று இப்பாது முனைந்திருக்கிறார்கள்

* * *

மொழிப் பிரச்னையைத் தீர்த்தால்தான், மற்றப் பொருளாதாரம் முதலிய பிரச்னைகளைத் தீர்க்க முடியும் என்று நிதிமந்திரி இலங்கரத்ன பகிரங்கமாக வாய்விட்டுக் கூறுவது குறிப்பிடத்தக்கது. மொழிப்பிரச்னையே இல்லையென்றும் மொழிச் சட்டம் நிறைவேறியதுடன் இது முடிந்துவிட்டதாயும் அச்சட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றி வைப்பதே பலகட்சிகளின் கடமையென்றும் "தேசாபிமானிகள்" யோசனை கூறிவந்தனர். ஆனால் இப்போது நிதிமந்திரியே மொழிப் பிரச்னை தீர்க்கப்பட வேண்டுமென்று வற்புறுத்துகின்றார். இதிலிருந்து அப்பிரச்னை இனனும் தீரவில்லை என்பதும் தமிழரின் ஒத்துழைப்பு இல்லாமல் முக்கிய தேசியப் பிரச்னைகளைத் தீர்க்க முடியாதென்பதை அரசாங்கம் உணர்ந்துள்ளதென்பதும் வெளியாகின்றது. இந்தப் பிரச்னை தீர்ந்துவிட்டதாக இப்போது எந்த "தேசாபிமானி"யும்கூறக் காணோம்!

மொழிப்பிரச்னையில் இடதுசாரிக் கட்சியினரையும் முடிந்தால் தமிழரசுக்கட்சியையும் கூடுமானவரை திருப்திசெய்ய

(5-ம் பக்கம் பார்க்க)

# ஏக்கருக்கு 238 டன் கரும்பு உற்பத்தி!

## கோயமுத்தூர் விவசாய ஆராய்ச்சியின் விளைவு

புதுடில்லி, மார்ச் 27

கோயமுத்தூர் விவசாயப் பண்ணையில் நடைபெற்ற கரும்பு ஆராய்ச்சியின் விளைவாக நாட்டின் கரும்பு உற்பத்தியில் புரட்சிகர மாறுதல் ஏற்படவிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

நாட்டின் பல பகுதிகளில் இதுசம்பந்தமான சோதனைகள் வெற்றிபெற்றிருக்கின்றன.

புதிய சாகுபடியின்மூலம்ஏக்கர் ஒன்றுக்கு 133 டன்கரும்பு உற்பத்தி செய்யப்பட்டது. ஒருஇடத்தில் ஒருஏக்கர் நிலம் 238 மெட்ரிக் டன் கரும்புகளை உற்பத்தி செய்தது. வழக்கமாக இந்தியாவில் ஏக்கர் ஒன்றுக்கு 15 அல்லது 16 டன் கரும்பு உற்பத்தியாகிறது. அதிக அளவு கரும்பு உற்பத்தி செய்யும் ஆஸ்திரேலியாவில்கூட ஏக்கர் ஒன்றுக்கு 25 முதல் 30 டன்வரையே உற்பத்தி செய்யப்படுகிறது.

ஆனால் இந்தியாவின் புதிய ஆராய்ச்சி அமோகமானபலனை அளித்திருப்பது மட்டுமன்றி, கரும்பின் சர்க்கரைச் சதவின் அளவும் உயர்வாய் இருப்பதால் உற்பத்தியில் புரட்சி ஏற்படும் எனக் கூறப்படுகிறது.

# "விஞ்ஞானமும், தத்துவமும் பாரதத்திலிருந்து ஈராக் வந்தன"

## அதிபர் அரீப் பேச்சு

புதுடில்லி, மார்ச் 27

ஈராக் அதிபர் அரீபுக்கு ஜனாதிபதி ராதாகிருஷ்ணன் நேற்றிரவு விருந்தளித்துக் கௌரவித்தார். டாக்டர் ராதாகிருஷ்ணன் அப்போது பேசுகையில் இனம், மதம் ஆகியவற்றின் பேரால் நடைபெறும் வன்முறைச் செயலின் பயங்கரத்தை முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமென்றும் மதம், இனம், தேசிய வெறியின் பேரால் மனிதகுலத்தின்மீது பெருங் கொடுமை இழைக்கப்பட்டு வருகிறதென்றும் குறிப்பிட்டார்.

பாரதமும் ஈராக்கும் சமாதானத்துக்காக ஒத்துழைக்கும் என நம்புவதாயும்அதிபர் அரீப் தலைமையில் பலதுறைகளில் ஈராக்நாடு முன்னேறியிருப்பதாயும், குர்ந்துப் பிரச்னையை வெற்றிகரமாகத் தீர்த்து வைத்த ஈராக் இதர பிரச்னைகளையும் அவ்வாறே தீர்க்கும் என நம்புவதாயும் டாக்டர் ராதாகிருஷ்ணன் தொடர்ந்து கூறினர்.

அதிபர் அரீப் இதற்குப் பதிலளித்துப் பேசுகையில், வாணிப, கலாச்சாரத் துறையில் இந்தியாவுக்கும் பாக்தாத்துக்கும் நெருங்கியதொடர்பு இருந்ததென்று கூறினர். வாசனைப் பொருட்களும், பட்டும் மட்டுமன்றி விஞ்ஞானம், தத்துவம் ஆகிய கலைகளும் இந்தியாவிலிருந்து ஈராக் சென்றன என்றும் பீல்ட்மார்ஷல் அரீப் கூறினர்.

நேற்று டாக்காவிலிருந்து வந்துசேர்ந்த ஈராக் அதிபர் ஜனாதிபதி ராதாகிருஷ்ணனுடன் பேச்சு நடத்தினர். பி ராஜ்காட்டுக்குச் சென்று மகாத்மாகாந்தியின் சமாதியில் அவர் மலர்வளையம் வைத்தார்.

ஈராக் அதிபருடன் அவரது வெளிநாட்டு மந்திரியும் வந்திருக்கிருர்,

# இந்தியா, பாகிஸ்தானுக்கு மேலும் அமெரிக்க ராணுவஉதவி

வாஷிங்டன், மார்ச் 27

சீனவில் ஏற்படவிருக்கும் அபாயத்தை முன்னிட்டு இந்திய மலைப்படைகளை நவீனமாக்குவதிலும் இதர வகையான ஆயுத உதவிகள் அளிப்பதிலும் அமெரிக்காஉதவிசெய்யும் என பாதுகாப்பு மந்திரி திரு. மக்னமாரா கூறினர்.

அதேசமயம் பாகிஸ்தானுக்கும் அதிக ராணுவ உதவியும் பயிற்சியும் அளிக்கப்படும் என்றும் பிரதிநிதிகள் சபை வெளிவிவகாரக் கமிட்டியில் அவர் கூறினர்.

பாகிஸ்தான் ராணுவத்தை அபிவிருத்தி செய்வதில் எவ்வளவோ உதவி செய்திருக்கிறோம். ஆனல் உபகரணங்கள் பற்ருக்குறை இருக்கிறது" என்றும் மக்னமாரா கூறினர்.

இருநாடுகளுக்கும் அளிக்கப்படவிருக்கும் ஆயுத உதவி பற்றி மேற்கொண்டு விபரம் எதுவும் அவர் கூறவில்லை. 1962-ம் ஆண்டு இந்தியா மீது சீனநடத்தியதாக்குதல், அதன் அண்டை நாடுகளின் ராணுவ பலவீனத்தையே காட்டுகிறது என்றும் திரு. மக்னமாரா கூறினர்.

"ராணுவ பலவீனம் கம்யூனிஸ்ட் ஆக்கிரமிப்புக்குத் தூபமிடும் என்பது தெளிவாகியிருக்கிறது. அரசியல் நடுநிலைமையும் அதன் ஆக்கிரமிப்புக்குத் தப்ப முடியாது" என்றும் அவர் கூறினர்.

"நாம் இந்தியாவுக்களிக்கும் ராணுவ உதவி பாகிஸ்தானுக்கு குழப்பத்தை உண்டு பண்ணியிருக்கிறது. ஆனல் இந்தியா பலம் பெற்று, சீன ஆக்கிரமிப்பை எதிர்க்கும் நிலையில் இருப்பது பாகிஸ்தான் உட்பட சகல சுதந்திரநாடுகளுக்கும் நன்மையை உண்டு பண்ணும்" என்றும் மக்னமாரா கூறினர்.

## ஐ. நா. வில் பாகிஸ்தான் உபசரிப்பு

நியூயோர்க், மார்ச் 27

ஐ. நா. விலுள்ள பாகிஸ்தான் பிரதிநிதி திரு. அஜ்மட் அலி, ஐ. நா. ராஜதந்திரிகளுக்கும், பத்திரிகையாளருக்கும் ஒரு உபசரிப்பு நடத்தினர். அதற்குத் தென்னபிரிக்கப் பிரதிநிதி கூட அழைக்கப்பட்டிருந்தார். தான் எவ்வித உறவும் கொண்டிராத கோமிண்டாங் சீனப் பிரதிநிதியும் அழைக்கப்பட்டிருந்தார்.ஆனல் இந்தியப் பத்திரிகையாளர்கள் மட்டும் அழைக்கப்படவில்லை.

பெரும்பாலான ஆசிய-ஆபிரிக்க நாடுகள் தென்னபிரிக்காவின் இனபேதக் கொள்கையை எதிர்த்து அதனுடன் எவ்வித உறவும் வைத்துக் கொள்வதில்லை. ஆனல் பாகிஸ்தான் ராஜதந்திர உறவுகளை அறுத்துக் கொண்ட போதிலும் தென்னபிரிக்காவுடன் நிறைய ஏற்றுமதி வியாபாரம் செய்து வருகிறது. தென்னபிரிக்காவுக்கு பிரதானமா ஏற்றுமதி செய்யும் நாடு பாகிஸ்தான் என ஐ. நா. கமிட்டியே கூறியிருக்கிறது.

## தளபதிகள் சந்திப்பில் பயனில்லை

ஸ்ரீநகர், மார்ச் 27

ஜம்முவில் இந்திய-பாகிஸ்தான் தளபதிகளிடையே நடைபெற்ற பேச்சு எவ்வித முடிவுமின்றி ஒத்திவைக்கப்பட்டது. சண்டை நடைபெற்ற பகுதியில் அமைதியைப் பராமரிக்க இந்தியா கூறிய இரு யோசனைகளையும் பாகிஸ்தான் தளபதி நிராகரித்தார். குறித்த பகுதியில் பொலிசார் ரோந்து சுற்றிவருவதற்கு பாகிஸ்தானுக்கு உரிமை உண்டென பாக். தளபதி அறிவித்ததாகக் கூறப்பட்டது.

## "சமூகவிரோத சக்திகள் நசுக்கப்படும்"

பாட்ன, மார்ச் 27

இந்திய உள்நாட்டு மந்திரி திரு குல்ஸாரிலால் நந்தா நேற்று பீகாரிலுள்ள கலகப் பிரதேசங்களுக்கு விஜயம் செய்தார். பின் அவர் ஜாம்ஷெட்பூருக்கும் விஜயம் செய்தார். எல்லா விடங்களிலும் அவர் பேசுகையில், சமூகவிரோத சக்திகள் ஈவிரக்கமின்றி நசுக்கப்படும் எனக் கூறினர்.

காமன்வெல்த் பிரதமர்கள்

## நேருவுடன் ஹியூம் கலந்தாலோசனை

புதுடில்லி, மார்ச் 27

வருகிற ஜூலை மாதம் காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாட்டை நடத்துவது பற்றி பிரிட்டிஷ் பிரதமர் சர் ஹியூம் திரு. நேருவைக் கலந்துகொண்டதாக அயல்நாட்டிலாகா அதிகாரி ஒருவர் கூறினர். மகாநாட்டில் பிரதமர் நேரு கலந்துகொண்டாரா என்று கேட்டதற்கு "பிரிட்டிஷ் பிரதமருக்கு இன்னும் பதில் அனுப்பப்படவில்லை" என அந்த அதிகாரி கூறினர்.

## ஷில்லாங் பாக். தூதரகம் மூடப்படும்?

புதுடில்லி, மார்ச் 27

ஷில்லாங்கில் உள்ள பாகிஸ்தான் துணை ஹைகமிஷன் காரியாலயம் உளவு நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருப்பதாகச் சொல்லப்படும் விஷயமும், துணை ஹைகமிஷன் காரியாலயத்தை மூடும் விஷயமும் வெளிநாட்டு விவகார இலாகாவின் பரிசீலனையில் இருப்பதாகப் பிரதம மந்திரி நேரு லோகசபையில் கூறினர்.

## கார்ப்பரேஷன் உபதேர்தல்

சென்னை, மார்ச் 27

ஆஸ்பத்திரி மைதான டிவிஷனிலிருந்து (40-வது டிவிஷன்) கார்ப்பரேஷனுக்கு ஒரு அங்கத்தினரைத் தேர்ந்தெடுப்பதற்காக ஏப்ரல் 21-ம் திகதி வாக்குப்பதிவு நடைபெறும். தேர்தல் சமயத்தில் இங்கு போட்டியிட்ட இரு அபேட்சகர்களில் ஒருவர் இறந்துவிட்டதால் தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டது.

## மனுபாய்ஷா

குவாய்த், மார்ச் 27

இந்திய வெளிநாட்டு வர்த்தக மந்திரி திரு. மனுபாய்ஷா நேற்று ஜெனிவாவிலிருந்து குவாய்த்துக்கு வந்திருக்கிருர்.

## கோல்வால்கர் விடுதலை

பாட்ன, மார்ச் 27

திங்கட்கிழமை இரவுஹஜாரிபாக்கிலிருந்து ராஞ்சிக்காரில் சென்று கொண்டிருந்தபோது கைது செய்யப்பட்ட ராஷ்டிரீய சுயம் சேவா சங்கத் தலைவர் திரு. எம். எஸ். கோல்வால்கர் விடுதலை செய்யப்பட்டு, பீகாரிலிருந்து வெளியேற்றப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

# தி. மு. க. சிறைவாசம் அசெம்பிளியில் புகார்கள்

சென்னை, மார்ச் 27

சுதந்திரப் போராட்டத்தின் போது அந்நிய அரசாங்கம் காங்கிரஸ்காரர்களை சிறைகளில் எவ்வளவு மோசமாக நடத்தியதோ அதேபோல் தான் தாங்களும் நடத்தப்பட்டதாக தி. மு. க. அசெம்பிளியில் கூறினர்கள்.

அரசியல் குற்றங்களை இழைப்பவர்கள் சிறையில் சுவர்க்க போகத்தை எதிர்பார்க்கஉரிமையில்லையென காங்கிரஸ் அங்கத்தினர்கள் பதிலளித்தனர்.

"அதற்காக சிறைகளை நரகமாக மாற்றியிருக்க வேண்டியதில்லையே" என தி. மு. க. வினர் திருப்பிச் சொன்னர்கள்.

சிறையிலுள்ள கக்கூசுக்குப் போக கைதிகள் "கியூ" வரிசையில் காத்திருக்க வேண்டியிருக்கிறது என திரு. எஸ். மாதவன் (தி. மு. க.) கூறினர்.

முதன்மந்திரி குறுக்கிட்டு, நிலைமை அடியோடு மாறியிருக்கிறது என்றார்.

தி மு க அங்கத்தினர் திரு. பாலகிருஷ்ணன் சிறையிலிருந்து கைவிலங்குடன் ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல்லப்பட்டார் என திரு. மாதவன் குறிப்பிட்டார். அரசியல் எதிரிகளிடம் பழிவாங்கும் முறையில் அரசாங்கம் நடந்து கொள்கிறது என்றும் அவர் குற்றஞ்சாட்டினர்.

"எதிர்க்கட்சியினர் மாமியார் வீட்டுக்குப் போவதாக நினைத்துக் கொண்டு சிறைக்குப் போகக்கூடாது" என திரு. நாராயணசாமிப்பிள்ளை (காங்கிரஸ்) கூறினர்.

வாரத்துக்கு ஒருமுறையோ அல்ல, இரண்டு வாரங்களுக்கு ஒருமுறையோ மட்டுமே கைதிகளுக்குக் குளிக்க வசதியளிக்கப்பட்டிருக்கிறது என புலவர் கோவிந்தன் புகார் கூறினர்.

சிறையிலிருக்கும்போது வெள்ளாட்டுக்கால் சூப்பு கேட்டதாக ஒருமந்திரி தம்மீது குற்றஞ்சாட்டியதாயும் தாம் அவ்வாறு கேட்கவில்லை என்றும் திரு. எம். எஸ். மணி கூறினர்.

# மதுரை பல்கலைக்கழகம்: திரு. பக்தவத்சலம் தரும் விபரம்

சென்னை, மார்ச் 27

மதுரையில் புதிதாக அமைக்க உத்தேசித்திருக்கும் பல்கலைக்கழகம்பற்றிய விபரங்களை முதன்மந்திரி திரு. பக்தவத்சலம் அசெம்பிளியில் தெரிவித்தார்.

சென்னை பல்கலைக்கழகத்தைப் போன்று அமைக்கப்படவிருக்கும் இதற்கு மதுரை-போடிநாயக்கனூரில் 1000 ஏக்கர் நிலத்தை ஆர்ஜிதம்செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றனவென்றும் பூர்வாங்க வேலைகள் இன்னும் முடிவு பெறவில்லை என்றும் முதன்மந்திரி கூறினர்.

மதுரையில் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டபிறகு சென்னையிலுள்ள சட்டக்கல்லூரி பேறுமானதாய் இல்லையெனத் தோன்றினல் மதுரையிலும் ஒரு சட்டக்கல்லூரி ஏற்படுத்தப்படும் என்றும் அவர் கூறினர்.

புதிய பல்கலைக்கழகத்திற்கு "திருவள்ளுவர் சர்வ கலாசாலை" எனப் பெயரிடப்படுமோ என ஒரு அங்கத்தினர் கேட்டார்.

அந்தக்கட்டம் இன்னும் வரவில்லை என்றும், எந்தெந்த ஜில்லாக்களில் உள்ள கல்லூரிகளை புதிய பல்கலைக்கழகத்துடன் இணைக்க வேண்டும் என்பதை ராஜ்யசபை அரசாங்கம் பின்பு முடிவுசெய்யும் என்றும் முதன்மந்திரி பதிலளித்தார்.

## மண்டபத்திலுள்ள இலங்கைசொத்துக்கள்

சென்னை, மார்ச் 27

மண்டபத்தில் இலங்கை அரசாங்கத்துக்குச் சொந்தமாகவுள்ள சொத்துக்களை விலைக்கு வாங்குவதுபற்றி அரசாங்கம் ஆலோசனை செய்துவருவதாக முதன்மந்திரி திரு. பக்தவத்சலம் கூறினர். சொத்துக்களின் விலைமதிப்பு பலலட்சம் ரூபாயாக இருப்பதால் இந்தப் பிரச்னையைப் பைசல் செய்வதற்கு நாள் பிடிப்பதாக முதன மந்திரி கூறினர்.

## சட்ட விரோதிகள் கைது

கல்கத்தா, மார்ச் 27

மேற்கு வங்காளத்தில் 1961-ம் ஆண்டு முதல் 1963-ம் ஆண்டுவரை சட்டவிரோதமாகப் பிரவேசித்த சுமார் 21953 பாகிஸ்தானிகள் கைது செய்யப்பட்டதாக ராஜ்ய மேல் சபையில் அறிவிக்கப்பட்டது.

## மாணவர்மீது தடியடிப்பிரயோகம்

டாக்கா, மார்ச் 27

டாக்கா பல்கலைக்கழகம் மூடப்பட்டதை ஆட்சேபித்து மாணவர்கள் நடத்திய ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை பொலிசார் தடியடிப்பிரயோகம் செய்ததாயும், இதன் விளைவாகப் பலர் காயம் அடைந்ததாயும் அறிவிக்கப்படுகிறது.

## ஸ்ரீரங்கநாதருக்கு ரூ. 25 லட்சம் "யுனெஸ்கோ" அளிக்கும்

சென்னை, மார்ச் 27

தமிழ்நாட்டிலுள்ள மிகப் பழைய ஆலயங்களில் ஒன்ருன ஸ்ரீரங்க ஆலயத்தின் திருப்பணிக்காக 1964-65-ம் ஆண்டில் ஐ. நா. கல்வி விஞ்ஞான கலாச்சார ஸ்தாபனம் ரூ. 25 லட்சம் அளிக்கக் கூடும் எனத் தெரிகிறது.

இந்த ஸ்தாபனத்தின் திரைப்பட, டெலிவிஷன் குழுவின் தூரகிழக்கு ஆலோசகரும், "யுனெஸ்கோ"வின் தேசிய கமிஷன் உறுப்பினருமான திரு. கே. சுப்ரமணியம் இத் தகவலைத் தெரிவித்தார்.

## கம்பன் விழா கவியரங்கம்

காரைக்குடி, மார்ச் 27

நேற்று நடைபெற்ற காரைக்குடி கம்பன் விழாவில் 6 கவிஞர்கள் தங்கள் கவிதைகளை அரங்கேற்றம் செய்தார்கள். நிகழ்ச்சிகளுக்கு திரு. கி. வா. ஜகன்னதன் தலைமை வகித்தார்.

## ராஜ்யசபைக்கு வாசன் தெரிவு

புதுடில்லி, மார்ச் 27

திரு. எஸ். எஸ். வாசன் (ஜெமினி) தமிழ் நாட்டிலிருந்து டில்லி ராஜ்ய சபைக்குத் தெரிவு செய்யப்பட்டிருக்கிருர்.

## சென்னை சேரி ஒழிப்புத்திட்டம்

சென்னை, மார்ச் 24

சென்னை நகரின் சேரி ஒழிப்புத் திட்டத்திற்கு ரூ 555 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

# சிமெந்து தொழிலாளர்களின் 19 கோரிக்கைகள்

## கூட்டுத்தாபனம் நிராகரித்தது

கல்லூர், வெள்ளி

காங்கேசன் துறை சிமிந்தித் தொழிற்சாலையில் தொழிலாளர்களின் மேலதிக அவசர வேலைகளுக்கு "ஓவர்டைம்" வழங்குவது பற்றி தொழில் மந்திரியுடன் பேச்சு நடத்திய பின்னரே முடிவு செய்ய முடியுமென்று சிமிந்திக் கூட்டுத்தாபனத் தலைவர் திரு. ஜி. பி. சமரசிங்கா தம்மைச் சந்தித்த தொழிலாளர் தூது கோஷ்டியினரிடம் தெரிவித்தார்.

கூட்டுத்தாபன சபைத் தலைவர் திரு. ஜி. பி. சமரசிங்கா, தொழிற்சாலை தொழில் மானேஜர் டாக்டர் வி. பேரம்பலம், பிரதம தொழிலதிகாரி திரு. நிகால் களகரத்தின ஆகியோரை சிமிந்தித் தொழிலாளர் யூனியன் தலைவர் திரு. டி. சிறிசேன, காரியதரிசி திரு. ஏ. சாம்பசிவம், நிர்வாகசபையைச் சேர்ந்த திரு கே. வி. முத்தையாபிள்ளை, திரு. டி. மயில்வாகனம் ஆகியோர் தொழிற் சங்க சம்மேளனப் பொதுக் காரியதரிசி திரு. என். சண்முகதாசன் தலைமையில் சிமிந்தித் தொழிலாளரின் பத்தொன்பது கோரிக்கைகள் சம்பந்தமாக சந்தித்து பேச்சு நடத்தினர்.

சமீபத்தில் நடைபெற்ற இப் பேச்சு வார்த்தைகள் பற்றிய முழு விபரங்களும் தற்போது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளன. தொழிலாளர் சமர்ப்பித்த கோரிக்கைகள் பற்றி நடைபெற்ற பேச்சுவார்த்தை பற்றி வெளியிடப் பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:—

பேச்சுவார்த்தை ஆரம்பமான போது திரு என். சண்முகதாசன், சிமிந்தித் தொழிற்சாலையில் பிழைகள் பல மலிந்திருப்பதாகவும் தொழிலாளர் பிரச்சனைகளைச் சமாதானமான முறையில் தீர்த்து வைக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

மேலதிகாரிகளுக்கு வேண்டியவர்களுக்கே உயர் பதவிகள் வழங்கப்படுவதாக தூது கோஷ்டியினர் தெரிவித்த புகாருக்குப் பதிலளித்த கூட்டுத்தாபன சபைத்தலைவர் தொழிலாளர் நியமனம், தொழிலாளர் பிரிவு என்பன கூட்டுத்தாபனத்தின் அலுவலாக இருப்பதனைச் சுட்டிக் காட்டினர்.

வாரத்தில் 45 மணி நேர வேலை சம்பந்தமாகப் பேசப் பட்டபோது சனிக்கிழமைகளில் இரண்டரை மணிநேரத்திற்கு "ஓவர்டைம்" வழங்கும் கோரிக்கையை தலைவர் நிராகரித்தார். வருடத்தில் வழங்கப்படும் 21 "காசுவல்" லீவு நாட்களை 28 நாட்களாக உயர்த்தும் கோரிக்கையை மந்திரியுடன் கலந்தாலோசித்த பின்னரே அபிப்பிராயங்கள் தெரிவிக்க முடியுமெனத் தெரிவிக்கப்பட்டது.

தொழிலாளர்களுக்கு இலவசமாகத் தேநீர் வழங்கும் யோசனையை அவர்கள் ஒரு மைல் சுற்றுடலில் வாழ்வதாகக் காரணம் காட்டி நிராகரித்தனர். தொழிற்சாலையின் 600 நிரந்தர ஊழியர்களில் 330 பேருக்கு கூட்டுத்தாபனம் உடைகள் வழங்கியும் அவர்கள் அணிவதில்லை என்று சுட்டிக் காட்டப்பட்டதுடன் மேலும் துணிக் கட்டுப்பாடு நிலவுவதனால் உடைகள் வழங்க முடியாதெனவும் தெரிவிக்கப் பட்டது.

தொழிற்சாலையில் இரவில் தங்கும் விடுதியிலுள்ள கட்டில்கள் மின்சாரக் கம்பிகள் தொழிலாளர்களினால் பழுதாக்கப் படுவதில் அவர்கள் இனிமேல் அவற்றை உபயோகப் படுத்தும் நிலைமையைக் கவனித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சில தொழிலாளருக்கு வழங்கப்படும் தினசரிச் சம்பளத்தை மாதச் சம்பளமாக வழங்குவது பற்றிப் பிரஸ்தாபிக்கப் பட்ட போது, கூட்டுத்தாபனம், தொழிலாளர் பிரதிநிதிகளுடன் தொழில் மந்திரியை 11-9-59-ல் சந்தித்துப் பேசி எடுக்கப் பட்ட முடிவுதான் இப்போது அமுல் நடத்தப் படுவது எனச் சுட்டிக் காட்டப்பட்டது.

உத்தியோக உயர்வு சம்பந்தமாகத் தொழிலாளர் செய்த புகார் மீது பேசப்பட்டபோது தூது கோஷ்டியினர் மௌனஞ் சாதித்தனராம்.

கல்கிளறும் மெஷினில் வேலை செய்பவர்கள் நாளொன்று இரண்டரை மணிவேலை செய்வதனால் அவர்களுக்கு தண்ணீர் வழங்கும் அவசியமில்லை எனத் தொழில் மானேஜர் தெரிவித்தார். குவாறி சூப்பிரண்டன்ட் திரு. டி. தேவராசா மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படவில்லை. போக்கு வரத்து வாகனங்கள் தாமதிப்பதனால் பிந்தி வரும் தொழிலாளருக்கு சலுகை காட்டப்படுவதாகவும் தொழில் மானேஜர் கூறினர்.

பேச்சுவார்த்தை முடிவில் அதிருப்தி அடைந்த தொழிலாளர்கள் பலர் இருப்பதாகவும் தமது கோரிக்கைகளில் நியாயமற்றவை ஏதேனும் உண்டா என்றும் திரு. சண்முகதாசன் கூட்டுத்தாபனத் தலைவரிடம் வினவினர்.

# காரைநகர் கொலை வழக்கு

## 9-ந் திகதி தீர்ப்பு

ஊர்காவற்றுறை, வெள்ளி

காரைநகர் வாசியும், சரவணைக் கிராமத்தைச் சேர்ந்தவருமான ஐயம்பிள்ளை கந்தையாவை கொலை செய்ததாக காரைநகர் வாசி வி. பரமசாமி மீதும் கொலை செய்யச் சதி செய்ததாக நெடுந்தீவைச் சேர்ந்த இறந்தவரின் மனைவி பராசக்தி மீதும் குற்றஞ்சாட்டி ஊர்காவற்றுறை பொலிசாரால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

முதலாம் எதிரி பராசக்தி தனது குழந்தையுடன் கோர்ட்டிற்கு வந்திருந்தார்.

எதிரிகள் தரப்பில் வாதாடிய புரக்டர் திரு. ஆர். விசுவநாதன், புரக்டர் எஸ். வீ. கதிரவேலு தமது தொகுப்புரைகளை கூறியதைத் தொடர்ந்து வழக்காளி சார்பில் ஏற்பட்ட அட்வகேட் திரு. ரி. கணேசலிங்கம் தனது கட்சியின் தொகுப்புரையை நிகழ்த்தினர். புரக்டர் திரு. பி. கதிர்வேலு வழக்கறிஞர் திரு. கணேசலிங்கத்திற்கும் புரக்டர் திரு. வி. என். நாதன் எதிரிதரப்பு வழக்கறிஞர்களுக்கும் உதவியாகவிருந்தனர்.

நீதிபதி திரு. அரசுவால்டன் தீர்ப்புக் கூறுவதை அடுத்த மாதம் 9-ம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

# ஐக்கிய கழகம் வெற்றி

யாழ்ப்பாணம், வெள்ளி

கடந்த ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்திற்கும் ஆத்தியடி விளையாட்டுக் கழகத்திற்கு மிடையே பருத்தித்துறை விளையாட்டு அரங்கில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் ஐக்கிய விளையாட்டுக் கழகம் ஒரு இன்னிங்ஸ 26 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. ஐக்கிய விளையாட்டுக் கழகத்தினர் முதலாம் இன்னிங்ஸில் 123 ஓட்டங்களையும், ஆத்தியடி விளையாட்டுக் கழகத்தினர் முதலாம், இரண்டாம் இன்னிங்ஸில் முறையே 57, 40 ஓட்டங்களையும் பெற்றனர்.

ஐக்கிய விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த வி. சிறீரங்கநாதன் 61 ஓட்டங்களைப் பெற்று திறமையாக விளையாடினர்.

பண்டாரநாயக்கா விசாரணைக் கமிஷன்

# "பிலிப் குணவர்த்தனவை பல விஷயங்களில் ஆதரித்தேன்"

## கல்விமந்திரி கலுகல்லே சாட்சியம்

கொழும்பு, வெள்ளி

"1957-ம் ஆண்டு நெற்காணி மசோதா கொண்டுவரப்பட்ட போது நான் எந்தப் பிரிவையும் சேர்ந்தவனாக இருக்கவில்லை. நெற்காணி மசோதாவிற்கு ஆதரவாக இருந்தேன். திருமதி விமலா விஜயவர்த்தன அந்தமசோவிற்கு எதிராகவிருந்தார். இம்மசோதா சில மந்திரிகள் கொண்டுவந்த திருத்தத்துடன் நிறைவேறியது. திரு. பிலிப் குணவர்த்தனவை பல விஷயங்களில் நான் ஆதரித்திருக்கிறேன்.

பண்டாரநாயக்கா கொலை விசாரணைக் கமிஷன் நேற்றுக் காலை விசாரணையை ஆரம்பித்தபோது வழக்கறிஞர் திரு. பார்குமாரகுலசிங்கம் கேட்ட கேள்விக்கு கல்வி, கலாச்சார அமைச்சர் திரு. பி. பி. ஜி. கலுகல்லே மேற்கண்டவாறு பதிலளித்தார்.

திரு. கலுகல்லே தொடர்ந்து கூறியதாவது:

திரு.பிலிப் குணவர்த்தனவை மந்திரி சபையிலிருந்து நீக்கினால் நான் ராஜினாமாச் செய்து விடுவேன் என்று காலஞ்சென்ற பிரதமருக்கு கடிதம் எழுதியது பற்றி எனக்கு ஞாபகமிருக்கிறது. நான் பிரதமரை நேரில் சந்தித்து இது பற்றிப் பேசினேன். இதனால் சில மந்திரிகள் விலகக்கூடுமென்றும் தெரிவித்தேன். ஒரு சமயம் அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த பல அங்கத்தவர்கள் ஒரு விருந்து நடத்தியதும் எனக்கு ஞாபகமிருக்கிறது. இவர்கள், விருந்தின் போது அரசியல் நிலைமை பற்றி திரு. ரி. பி. இலங்கரத்தினவுடன் விவாதித்தபின் கம்பளையில் உள்ள அவரது வீட்டிற்குச் சென்றார்கள். இந்த விருந்தில், திருவாளர்கள் நிமல் கருணதிலகா, பியசேன தென்னக்கோன், ரி. பி. சுபசிங்கா ஆகியோரும் கலந்துகொண்டார்கள்.

மந்திரி சபையில் திருவாளர்கள் பிலிப் குணவர்த்தன, வில்லியம் சில்வா ஆகியோரின் நிலைமை பற்றி திரு இலங்கரத்தினவுடன் விவாதித்தார்கள். மந்திரி சபை திருத்தி அமைக்கப்பட வேண்டுமென்று அவர்கள் விரும்பினர்கள். திரு. பிலிப்குணவர்த்தனவும் மந்திரி சபையில் இருக்கவேண்டுமென விரும்பினர்கள்.

திருமதிவிமலாவிஜயவர்த்தனவின் வீட்டிற்கு நான் ஒருமுறை விஜயம் செய்தேன். அவர் எனது குடும்ப நண்பராயிருந்தார். திருமதி விஜயவர்த்தனவின் மருமகனும் மாவனல்ல எம். பி.யுமான திரு. பெலிகமன எனது நண்பன். நெற்காணி மசோதாவிற்கு மந்திரி சபையிலுள்ள இருபகுதியினரும் ஆதரவுதேடுவதை காலஞ்சென்ற பிரதமர் அனுமதித்தாரா என்பது எனக்குத் தெரியாது. ஆனால் இரு பகுதியினரும் தங்கள் கருத்தை வெளியிட்டார்கள். இப் பிரச்னையில் நான் திரு. பிலிப் குணவர்த்தனவுக்கு ஆதரவாகவிருந்தேன். திருவாளர்கள் நிமல் கருணாத்திலகா, பி.தென்னக்கோன் ஆகியோரும் ஆதரவாக இருந்தார்கள். பிரதமர் கொலைசெய்யப்பட்ட செய்தி கிடைத்ததும் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி ஏற்பட்டது. நான் பிரதமரைப் போய் சந்திக்க விரும்பினேன்.

# எதிரி விடுதலை

ஊர்காவற்றுறை, வெள்ளி

ஊர்காவற்றுறையிலுள்ள கடற்படை இலாகா மேற்பார்வையிலுள்ள பழுதடைந்த கட்டுமரங்களைக் களவாடியதாக ஊர்காவற்றுறையைச் சேர்ந்த ஆரோக்கியசாமி என்பவர் மீது குற்றம்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் ஊர்காவற்றுறை நீதிபதி திரு. அரசுவால்டன் எதிரி குற்றவாளி அல்ல எனக் கண்டு விடுதலைசெய்தார்.

இந்த வழக்கில் கடற்படை இலாகாவைச் சேர்ந்த திரு. ஜெயசிங்கா, திரு. வியன ஆராச்சி, திரு. யோசேப் ஆகியோர் சாட்சியமளித்தனர். எதிரி தரப்பில் திரு. ஜிம்மி இராசரத்தினம் ஆஜரானர்.

## மகா வித்தியாலயமாக்கக் கோரிக்கை

ஊர்காவற்றுறை, வெள்ளி

கருவில் சென். மேரிஸ் தமிழ்ப் பாடசாலையை மகா வித்தியாலயமாக்கித் தரவேண்டுமெனக் கல்விப் பகுதியைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானம் ஒன்று பிரஸ்தாப பாடசாலையின் பெற்றார் ஆசிரியர் சங்கக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சங்கத் தலைவர் திரு. ஞானப்பிரகாசம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் மகா வித்தியாலயமாக்குவதற்கு நிலத்தையும் கட்டிடத்தையும் சங்கம் அரசாங்கத்திற்குக் கொடுத்துதவுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

கருவில் கிராமத்தைச் சேர்ந்தவரும் நீர்கொழும்பு வாசியுமான திரு. நல்லதம்பி ஜே. பி. யின் மறைவு குறித்து இக்கூட்டத்தில் அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

புதுவருட உத்தியோகஸ்தர் தெரிவு வருமாறு:

தலைவர்: திரு. ஞானப்பிரகாசம் (தலைமை ஆசிரியர்), காரியதரிசி: திரு. டொமினிக், தனதிகாரி: பண்டிதர் சி. வைத்திலிங்கம்.

# 'சர்வாதிகாரம் என்பது வதந்தியே'

## பத்திரிகை கமிஷன் முன் நிருபர் சாட்சியம்

கொழும்பு, வெள்ளி

ஜனநாயகத்திற்கு மாறாக சர்வாதிகார ஆட்சி ஏற்படுத்துவது பற்றிய பயமுறுத்தலையிட்டு பத்திரிகைகள் அபிப்பிராயம் தெரிவிப்பது தவறல்ல. ஆனால், வதந்தியின் அடிப்படையில் வெளிவந்த செய்திகள் பற்றி அபிப்பிராயம் தெரிவிக்கக் கூடாது.

பத்திரிகை கமிஷன் முன் சாட்சியமளிக்கும் போது 'டைம்ஸ் ஒப் சிலோன்' மாகாண நிருபர் திரு. ஆரியவன்சா பதிராசா மேற்கண்டவாறு, கமிஷன் தலைவரின் கேள்வியொன்றிற்கு பதிலளித்தார்.

திரு. ஆரியவன்சா பதிராசா தொடர்ந்து சாட்சியமளித்த போது கூறியதாவது: சர்வாதிகார ஆட்சி நிறுவுவதுபற்றி வதந்திகள் மட்டுமே நிலவியது. இதனை நிரூபிப்பதற்கு தகுந்த சாட்சியங்கள் இல்லை. இது வரை எவரும் தகுந்த சாட்சியங்கள் அளிக்கவில்லை.

# ரூ. 200 அபராதம்

ஊர்காவற்றுறை, வெள்ளி

ஊர்காவற்றுறையில் வசிக்கும் காளிமுத்து-குப்பமுத்து என்ற தொழிலாளியைக் கத்தியால் வெட்டினர் எனக் குற்றம் சாட்டி அதே ஊரைச் சேர்ந்த அந்தோனி பெரியதம்பி என்ற தொழிலாளி மீது தொடரப்பட்ட வழக்கில் நீதிபதி அரசுவால்டன் எதிரியை குற்றவாளியாகக் கண்டு கோடு கலையும்வரை சிறையும் 200 ரூபாய் அபராதமும் விதித்தார். குற்றப் பணத்தில் 150 ரூபாய் காயமடைந்தவருக்கு கொடுக்கப்பட வேண்டும் எனவும் நீதிபதி குறிப்பிட்டார்.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

இன்று முதல்

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனி வீதி)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீ கிருஷ்ணா (திருகோணமலை)
ரிஜிநா (ஹட்டன்) மொடேர்ன் (பதுளை) வெம்பிளி (கண்டி)
கல்யாணி (நாவலப்பிட்டி)

எம். ஜி. ராமச்சந்திரன்—பி. சரோஜாதேவி
எம். ஆர் ராதா டி. ஆர். ராஜகுமாரி
எஸ். ஏ. அசோகன்—நாகேஷ்
மற்றும் பலர் நடித்த

ஆர். ஆர். பிக்ஸர்ஸ்

பெரிய இடத்துப் பெண்

டைரக்ஷன்: ராமண்ணா
இசை: விஸ்வநாதன் ராமமூர்த்தி
பாடல்கள்: கண்ணதாசன்
கதை-வசனம்: சக்திகிருஷ்ணசாமி

## வானொலிநிகழ்ச்சிகள்

### கொழும்பு

**சனி 28-3-64**

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கத்தோலிக்கநற்சிந்தனை, 7-15 வாய்ப்பாட்டு, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பநிகழ்ச்சி.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 மாணவர் மன்றம், 5-45 திரை இசை, 6-10 மார்க்கட் நிலவரம், 6-15 கிராமசஞ்சிகை.

இரவு 6-45 இவ்வார நிகழ்ச்சி, 7-00 இசைநாடகம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 8-15 பேச்சு, 8-30 இஸ்லாமிய கீதம், 9-15 பேச்சு, 9-30 வயலின், 10-00 நேயர்விருப்பம்.

**ஞாயிறு 29-3-64**

காலை 6-45 உதயகீதம், 6-55 கத்தோலிக்கநற்சிந்தனை, 7-15 வாய்ப்பாட்டு, 7-45 மெல்லிசை, 8-00 பௌத்தநிகழ்ச்சி, 8-15 தமிழ் மூலம் சிங்களம், 8-30 ஞானாஞ்சலி, 9-00 முஸ்லிம் பாடசாலை, 9-30 திரை இசை, 11-30 சிறுவர்மலர்.

பகல் 12-15 நேயர்விருப்பம், 1-00 பெண்கள் நிகழ்ச்சி.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 வாய்ப்பாட்டு, 5-45 பேச்சு, 6-15 கோவில் அஞ்சல்.

இரவு 7-15 நாடகஅரங்கு, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 8-15 மாணவர்மன்றம், 8-30 நேயர் விருப்பம், 9-15 விசேஷ கிறிஸ்தவநிகழ்ச்சி, 9-45 தேர்ந்த இசை, 10-00 நிலைய ஒலிப்பதிவு.

### திருச்சி

**சனி 29-3-64**

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-00 மங்களஇசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7-05 வாத்திய இசை, 7-30 வயலின், 8-15 காரைக்குடி கம்பன் விழா வர்ணனை.

பகல் 1-00 பிள்ளைக்கனியமுது, 1-30 கதம்பம், 2-15 வயலின்.

மாலை 5-15 திரைப்பட இசை, 5-45 வாத்தியஇசை, 6-20 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-30 இசைநாடகம், 8-15 இசைக்கோவை, 8-40 தேசபக்திப்பாடல்கள், 9-15 இசைக்கோவை, 9-30 அகில பாரத சங்கீதநிகழ்ச்சி.

**ஞாயிறு 28-3-64**

காலை 6-30 மங்களஇசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7-05 வாத்திய இசை, 7-30 பாட்டு, 8-15 பாட்டு.

பகல் 12-00 நீங்கள் கேட்டவை, 12-30 கதம்பநிகழ்ச்சி, 1-00 மணிமலர், 1-50 வாத்திய இசை, 2-10 பெண்ணுலகம், 2-30 மெல்லிசை, 3-00 பாட்டு.

மாலை 5-15 பாட்டு, 5-45 இசைப்பயிற்சி, 6-20 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-45 பாட்டு, 8-45 வாத்தியஇசை. 9-15 தேசபக்திப்பாடல்கள்.

---

## மகளுக்கு தாய் இரும்பால் சுட்டாராம்?

காங்கேசன்துறை, வெள்ளி

ஊரணியைச் சேர்ந்த ரீதா என்னும் 13 வயதுடைய மாணவி அராலியைச் சேர்ந்த இளைஞரொருவருக்குக் காதல் கடிதம் எழுதியதாகவும் இது சம்பந்தமாக ரீதாவைக் கண்டிக்குமுகமாக அவரது தாயார் அவரை நெருப்பில் காய்ச்சிய இரும்புக் கம்பியால் எரிகாயங்கள் உண்டாக்கினர் என்றும் குற்றஞ்சாட்டி காங்கேசன் துறைப் பொலிசார் அவரைக் கைதுசெய்தனர்.

---

ஆசிரியருக்கு கடிதக்

## கிராமசபை தேர்தல்

வருங்காலத்தில் ஸ்தலஸ்தாபனங்களே பிரபல்யமடைந்து உள்ளூர் ஆட்சியில் பெரும் பங்கெடுக்கும் நிலை ஏற்பட அரசாங்கம் வழிவகுத்துவருகின்றது. அத்துடன் பதினெட்டு வயதுடைய இளைஞர்களும் இதில் பங்குபற்ற வசதி யேற்படுத்தப்பட்டுள்ளது இதனால் தற்போது தெரிவு நடைபெறும் கிராமசபைகளிலே ஒவ்வொரு வட்டாரத்திற்கும் பலர் போட்டியிடும் நிலை ஏற்பட்டுள்ளது கட்டுப்பணம் பத்துருபாதானே போனாற் போகட்டும் நானும் கேட்கத்தான் வேண்டும் என்ற எண்ணம் பலருக்கு ஏற்படுவதாலேயே போட்டியிற் பலர் பங்குபற்றுகின்றனர். இதனை மாற்றவேண்டுமானால் கட்டுப்பணம் நூறுருபாயாக உயர்த்தப்படவேண்டும். எழுதவாசிக்கத் தெரிந்தாற்போதும் என வைக்கப்பட்ட சட்டம் கல்விப் பயிற்சியில் வெகுதூரம் முன்னேறிவரும் இக்காலத்திலும் இருக்க வேண்டிய அவசியமில்லை. இச்சட்டமும் அவசியம் மாற்றப்பட்டுக் குறைந்தது ஜே. எஸ். சி. யாவது சித்தி பெற்ற சான்றிதழ் உடையவரே அபேட்சகராவதற்கு அனுமதிக்கப்பட வேண்டும் அப்போதுதான் ஸ்தலஸ்தாபனங்களுக்கு தகுதிவாய்ந்த அங்கத்தவர் தெரிவுசெய்யப்பெற்று கௌரவமும் சிறப்பு மேற்படும்.

நா. இ.

கைதடி-நாவற்குழி.

---

## உரும்பராயில் கதம்ப விழா

யாழ்ப்பாணம், சனி

உரும்பராய் இந்துக்கல்லூரியின் விளையாட்டு நில நூல்நிலைய அபிவிருத்திக்காக இன்று சனிக்கிழமை மாலை திரு. வி. தியாகலிங்கம் கியுஸி தலைமையில்உரும்பராய்சைவத் தமிழ் வித்தியாசாலை முன்றிலில் கதம்பவிழா ஒன்று நடைபெறுமென அறிவிக்கப்படுகிறது. கதம்பவிழா கல்லூரி மாணவர்களினதும் அயற்பாடசாலை மாணவர்களினதும் நிகழ்ச்சிகள் பல இடம்பெறுகின்றன. கொக்குவில் நடனகலாபவன மாணவர்களின் பரத நாட்டியமும் அரியாலை நாடக மன்றத்தாரின் 'பிரிதிவிராஜன்' என்னும் நாடகமும் இடம் பெறுகின்றன.

---

## இளைஞன் தற்கொலை

உடுப்பிட்டி, வல்வெளி

பருத்தித்துறை கடற்கடை வீதியிலுள்ள தொம்பியப்பர் கோவிலுக்கருகாமையில் வசிக்கும் ரேக். யேசுதாசன் (22 வயது) என்னும் இளைஞன் நச்சுத்திராவகம் அருந்தி மரணமானர்.

திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. தம்பிப்பிள்ளை மரண விசாரணை நடத்தினர். விசாரணையின் பின்னர் தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

---

## தமிழ் மூச்சாய் . . .

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கன் மிஷன் அச்சியந்திரசாலையில் தொழிலாற்றினர். அக்காலையில்வித்துவான்கணேசையரிடம் பாடம்கேட்டு பிரவேச பண்டிதர் பரீட்சையிலும் சித்தியெய்தினர். பின் கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்குச் சேர வாய்ப்பிருந்தும் அதைவிடுத்து 1926-ம் ஆண்டில் சுன்னாகத்தில் தனலக்குமி புத்தகசாலையை ஆரம்பித்தார். 1927-ல் திருமகள் அழுத்தகத்தைஆரம்பித்த இவர் 1930-ம் ஆண்டளவில் "ஈழகேசரி"யைத் தொடங்கினர்.

இவரது அயராத உழைப்பும் ஊக்கமும் இவரால் தொடங்கப்பட்ட ஸ்தாபனங்களை மேம்பாடான நிலைக்குக் கொண்டுவரச் செய்தன. இன்றும் அவரது அயராத ஊக்கத்தின் சின்னங்களாக திருமகள் அழுத்தகம், தனலக்குமி புத்தகசாலை, வட இலங்கைத் தமிழ் நூற்பதிப்பகம் ஆதியன விளங்குகின்றன.

எல்லாவற்றிற்கும் மேலாக தனது பிறந்த கிராமத்தையும் இவர் மறந்து விடவில்லை. 1936-ம் ஆண்டு தொடங்கி 1946-ம் ஆண்டு வரை மயிலிட்டிக் கிராமச் சங்கத் தலைவராக விளங்கி சுற்று வட்டாரத்திலுள்ள கிராமங்களுக்கும் தனது தொண்டைப்பயன் படச் செய்தார்.

ஈதலிசை பட வாழ்தலது
வல்ல
தூதியமில்லை உயிர்க்கு

என்ற வள்ளுவர் அமுத வாக்குக்கு அமைய அவர் வாழ்க்கையை அமைத்தற்கு எடுத்துக் காட்டாகப் பல ஸ்தாபனங்கள் விளங்குகின்றன. 1934-ம் ஆண்டளவில் அமைக்கப்பட்ட குரும்பசிட்டிச் சன்மார்க்கசபைக் கட்டடம் இன்று அவர் பெருமையின் சின்னமாக மிளிர்கின்றது.

'ஈழகேசரி' பொன்னையா நினைவுவிழாவை குரும்பசிட்டி சன்மார்க்க சபை இன்று கொண்டாடுகிறது.

---

## ஸ்வீப்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரூபா 500 பரிசு பெறும் டிக்கட்டுகளின் விபரம் வருமாறு:-

| | |
|---|---|
| 04 Q 0722 | 09 T 0435 |
| 13 G 0488 | 03 U 0951 |
| 11 G 0278 | 11 C 0556 |
| 09 B 0640 | 14 M 0913 |
| 15 T 0113 | 10 X 0419 |
| 04 H 0130 | 05 D 0366 |
| 15 V 0068 | 15 H 0802 |
| 15 L 0465 | 12 Y 0737 |
| 05 Z 0248 | 08 C 0010 |
| 03 H 0556 | 15 H 0673 |
| 09 L 0834 | 03 X 0628 |
| 13 T 0873 | 10 Z 0321 |
| 09 T 0737 | 14 Q 0419 |
| 11 N 0519 | 12 G 0236 |
| 09 J 0284 | 05 G 0478 |
| 05 B 0806 | 05 T 0268 |
| 06 C 0872 | 12 V 0624 |
| 01 Q 0106 | 12 N 0407 |
| 16 F 0167 | 10 L 0682 |
| 16 P 0207 | 03 H 0959 |
| 14 U 0182 | 16 P 0536 |
| 13 A 0653 | 10 X 0778 |
| 14 Y 0104 | 15 Z 0828 |
| 04 I 0578 | 11 Z 0085 |
| 08 Y 0045 | 17 A 0834 |
| 15 X 0319 | 01 B 0033 |
| 15 J 0238 | 06 F 0322 |
| 11 J 0235 | 07 C 0256 |
| 01 G 0095 | 10 M 0617 |
| 13 X 0539 | 03 A 0604 |
| 14 Z 0233 | 09 A 0351 |
| 04 E 0329 | 13 N 0305 |
| 12 Z 0971 | 04 G 0561 |
| 04 V 0895 | 01 N 0522 |
| 04 P 0586 | 11 T 0523 |
| 10 K 0254 | 11 C 0822 |
| 04 J 0973 | 11 J 0816 |
| 02 M 0337 | 12 G 0901 |
| 09 T 0246 | 06 I 0642 |
| 04 G 0137 | 06 K 0425 |
| 09 Z 0228 | 14 D 0383 |
| 02 Z 0518 | 07 C 0034 |
| 02 G 0467 | 08 A 0821 |
| 10 D 0714 | 12 X 0072 |
| 01 E 0880 | 15 J 0952 |
| 07 W 0794 | 10 R 0833 |
| 02 G 0613 | 10 Q 0717 |
| 04 M 0781 | 04 L 0738 |
| 04 X 0953 | 07 R 0393 |
| 14 E 0828 | 16 A 0369 |

---

யாழ்ப்பாணம்

## ஆஸ்பத்திரி நிர்வாகம் பற்றி மேலும் கண்டனம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரியின் நிர்வாகத்தைப் பற்றி அனேக முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளது வருந்தத்தக்க விஷயமென்றும், இப்படியான ஒரு முறைப்பாடு ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் குணபாலாவினல் தன் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளதென்றும், மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ் கனகரத்தினம் வசாவிளானைச் சேர்ந்த நடராசாவின் 15 வயது மகள் தவமணியின் மரணவிசாரணையின் போது தெரிவித்தார். மரணவிசாரணையின் பின் விபத்தினல் ஏற்பட்ட மரணமெனத் தீர்ப்பளித்தார்.

"காலஞ்சென்ற தவமணிதேவி எரிகாயங்களுடன் பெரிய ஆஸ்பத்திரியில் பெப்ரவரி 8-ந் திகதி அனுமதிக்கப்பட்டு 16-ந் திகதி மரணமானர். ஆஸ்பத்திரியில் கடமையாற்றிய பொலிஸ் கான்ஸ்டபிள் திரு. குணபாலா சாட்சியமளிக்கும்போது, இச்சம்பவம் பற்றி 8-2-64ல் பொலிசுக்கு அறிவிக்கும்படி அனுமதிசீட்டில் தெரிவிக்கப்பட்டிருந்ததாகவும், ஆனல் தவமணிதேவி காலமான பின்பே பொலிசுக்கு அறிவிக்கப்பட்டதாகவும், இப்படியான பல சம்பவங்கள் ஏற்கனவே நடைபெற்றுள்ளதாகவும், இதுபற்றி ஆஸ்பத்திரி காரியதரிசிக்கு அறிவித்தும்; எதுவித பயனும் ஏற்படவில்லை என்றும் கூறினர்.

மரணவிசாரணை அதிகாரி திரு. கனகரத்தினம் மேலும் கூறியதாவது:

"இவ்விஷயம் பற்றி பொலிசாருக்கு அறிவிக்கும்படி காலமான தவமணிதேவியின் அனுமதிச் சீட்டில் நோயாளிகளை அனுமதிக்கும் உத்தியோகஸ்தர் குறிப்பிட்டிருந்தார். தவமணி மரணமாகும்வரை 5 வாரங்களாக இந்த உத்தரவு நிறைவேற்றப்படவில்லை. இப்படியான தவறு ஏற்பட்டது இதுதான் முதல் தடவையல்லவென பொலிசார் சுட்டிக் காட்டியுள்ளனர். இந்த உத்தரவுகள் நிறைவேற்றப் படாததால் நிலைமை மோசமாகக்கூடும். ஆஸ்பத்திரி நிர்வாகம் சீர்கெடும்வரை காத்திராமல், இப்போதே நிலைமையைச் சீர்திருத்த சந்தர்ப்பம் இருக்கிறது.

---

## ஐ.. றன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இப்போது அரசாங்கக் கட்சியினர் முனைந்துள்ளதாகவும் தங்கள் ஆட்சி நீடிக்க அது ஒன்றுதான் வழி என்பதையும் அவர்கள் உணர்ந்துள்ளதாகவும் தெரிகிறது. நேரடி நடவடிக்கையை தமிழரசுக்கட்சியினர் ஒத்திவைத்துள்ளதிலிருந்து அரசாங்கக் கட்சியினர் இந்தப் புதிய முயற்சியில் தமிழரசுக் கட்சியினருக்கு நம்பிக்கை இன்னும் இருக்கிறதென்பதற்கு அடையாளமுமாகும்.

* * *

இங்கிலையில் கூட்டு அரசாங்கம் கூடாதென்று சிலர் கூச்சல் போடுகின்றனர்கள். சமயத்தில் சபையைக் கலைத்து பொதுத் தேர்தல் நடத்தினல் மீண்டும் வகுப்புவாதம், மொழிவெறி, இந்தியத் துவேஷம் எல்லாம் கிளம்பக்கூடும். பலதேசியப் பிரச்னைகளும் தீருவதற்குப் பதில்நிலைமை மோசமாகவும்கூடும்.

இச்சமயம் ஒரு தேசிய அரசாங்கம் ஏற்படுவதே பல விதங்களிலும் நல்லது. அது முடியாதுபோயின் ஒரு கூட்டு அரசாங்கமாவது ஏற்படுவது இன்றைய நிலையில் நாட்டுக்கு தீமையைவிட நல்லதையே செய்யலாமல்லவா?

* * *

ஒருவனாய் உலகத்தேநின்ற நாளோ ஒருருவே மூவுருமான நாளோ, கருவனாய்க் காலனை முன்காய்ந்த நாளோ காமனையுங் கண்ணழலால் விழித்தநாளோ, மருவனாய் மண்ணும் விண்ணுந் தெரிந்த நாளோ மான்மறிக்கை யேந்தியோர் மாதோர் பாகந், திருவினால் சேர்வதற்குமுன்னோ பின்னோ திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே.

— திருநாவுக்கரசர்

---


வரி விளம்பரம்

**யாழ். கல்லூரி பெண்கள் கிளை**

29, பருத்தித்துறை றோட்டு, யாழ்ப்பாணம் தட்டெழுத்து, சுருக்கெழுத்து ஆங்கிலத்தில், தமிழில் கணக்கு பதிவியல் சிங்களம், ஜி. சி. ஈ. சாதாரணம். கலை, விஞ்ஞானம், வர்த்தகம். மேல்தரம் கலை. தையற்கலை, வீணை, மற்றும் சங்கீத வகுப்புகள். காலை மாலை.
80 எஸ். கனகசபை.

**விற்பனைக்கு**

மறவன்புலோ வள்ளக்குளம் பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் 5 ஏக்கர் நல்ல நெல் காணி விற்பனவுக்கிருக்கிறது. விலை விபரங்களை சி. தம்பையா, கிராமசபை, புத்தூர் விலாசத்தில் அறிந்துகொள்ளலாம். 76

**அரைச்சலார்**

அநேக மக்களின் ஆதரவு பெற்ற சுன்னாகம் "பிறின்ஸ்" புகைப்பட ஸ்தாபனத்தார் 10-வது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு 25-4-64 வரை அரைச்சலார். 62

**றேடியோ**

வாங்கவோ, விற்கவோ பழுதுபார்க்கவோ, சிறந்த இடம்.
S. சுலைமான்கண்டு & பிரதர், காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 55

**விற்பனைக்கு**

நல்ல நிலைமையில் உள்ள 6 வோல்ற் பற்றறிகள் விற்பனைக்கு உண்டு. முருகன் எலக்றிக்கல் ஸ்ரோர்ஸ், 6/8, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
78

**தொய்வு, நீரிழிவு**

குணப்படுத்த உத்தரவாதம். மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனாம். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50. நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50.
வைத்தியர் பரிபூரணனந்தர், கைலாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

**தேவை**

சிமெண்ட் பைக்கட் பேப்பர் தேவை.
மில்க் வைற் சோப் தொழிற்சாலை, 527, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். 72


---

## போட்டியிலிருந்து விலகினர்

மானிப்பாய், வெள்ளி

மானிப்பாய் கிராமசபைத் தேர்தலில் 9-ம் வட்டாரத்தில் போட்டியிடும் திரு. க. சோமாஸ்கந்தன், தாம் போட்டியிலிருந்து விலகி விட்டதாக அறிவித்துள்ளார்.

---

## ராஜ்யசபை தேர்தல்கள்

புதுடில்லி, மார்ச் 17

ராஜ்ய சபையின் 75 ஸ்தானங்களுக்கு நடைபெற்ற தேர்தலில், 69 ஸ்தானங்களின் முடிவு கிடைத்திருக்கிறது. இதில் காங்கிரஸ் 45 ஸ்தானங்களைக் கைப்பற்றியிருக்கிறது.

---

ரூபா 250 பரிசுபெறும் 24 டிக்கட்டுகள்:

| | |
|---|---|
| 15 A 0713 | 15 P 0713 |
| 15 D 0713 | 15 S 0713 |
| 15 C 0713 | 15 V 0713 |
| 15 K 0713 | 15 Y 0713 |
| 15 N 0713 | 15 C 0713 |
| 15 R 0713 | 15 F 0713 |
| 15 U 0713 | 15 J 0713 |
| 15 X 0713 | 15 M 0713 |
| 15 B 0713 | 15 Q 0713 |
| 15 E 0713 | 15 T 0713 |
| 15 I 0713 | 15 W 0713 |
| 15 L 0713 | 15 Z 0715 |

# பிரதமரை மேத்தானந்தா சந்தித்துப் பேசினார்

கொழும்பு, வெள்ளி

அரசியல்நிலைபற்றியும் நாட்டில் நிலவும் வதந்திகள் சம்பந்தமாகவும் பௌத்த ஜாதிக பலவேகயா தலைவர் திரு. எல். எச். மெத்தானந்தா நேற்று பிரதமர் சிறிமா பண்டாரநாயக்காவைச் சந்தித்துப் பேசினார்.

தமக்குப் பேட்டியளிக்குமாறு திரு. மெத்தானந்தா முன்னர் கேட்டிருந்தார்.

## டட்லி மீண்டும் சந்திப்பு

எதிர்க்கட்சித் தலைவர் திரு. டட்லி சேனநாயக்கா நேற்று மீண்டும் இரகசியப் பொலிஸ் இலாகாவுக்குச் சென்றார். பார்லிமெண்டரிமுறை ஆட்சி அமைப்பைக் கவிழ்க்கும் முயற்சிபற்றி இரகசியப் பொலிஸ அதிபருக்கு திரு. டட்லி மற்றொரு வாக்குமூலம் கொடுத்ததாக அறியப்படுகிறது.

# உச்சி மகாநாட்டின் நிகழ்ச்சி நிரல் விபரம்

கொழும்பு, வெள்ளி

ஐக்கிய நாட்டு சாஸனத்தின் கொள்கைக்கிணங்க,குறிப்பாக சுய ஆதிபத்திய உரிமையின் கீழ் நாடுகளுக்கிடையேயுள்ள பிரச்னைகளை பயமுறுத்தல், அல்லது பலாத்காரம் மூலம் தீர்க்க முயலக் கூடாது என்றும் நிகழ்ச்சி நிரலை 2-வது மண்டலசார்பற்ற மகாநாடுகொண்டிருக்கும்.

மகாநாட்டின் நிகழ்ச்சி நிரல் பின்வருமாறு:

சர்வதேச விஷயம் பற்றிய பொதுவான நிலைமை, உலக சமாதானத்தைப் பாதுகாத்தலும், பலப்படுத்தலும், சமாதானமாக உடனிருந்து வாழ்தல், நாடுகளின் ஆதிபத்திய உரிமையையும், பிரதேச கௌரவத்தையும் மதித்தல், பிரிபட்ட நாடுகளின் பிரச்னைகள், இன ஒதுக்கல் கொள்கை, பொதுவான பூரண ஆயுதப் பரிகரணம், அணுசோதனைகளை தடுத்தல், அணுசூன்யப் பிரதேசங்களை நிறுவுதல், ராணுவ ஒப்பந்தம், வெளிநாட்டுத் தளங்களும் துருப்புக்களும்.

## தமிழ் மொழி பெயர்ப்பு

அநுராதபுரம், வெள்ளி

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் பொலிசிகளை ஆங்கிலத்தில் வழங்குவதுடன் அதன் தமிழ் மொழி பெயர்ப்பொன்றையும் சேர்த்து அனுப்பும் புதிய முறையை அனுஷ்டித்து வருகின்றது.

## விரிவுரையாளர் நியமனம்

சிலாபம், வெள்ளி

வேத சிவாகம விஸ்வ வித்யா பீடம் பிரமஸ்ரீ. ந. லக்ஷ்மி நாராயண சர்மாவை விரிவுரையாளராக நியமித்தது. நீர்கொழும்பு மாரியம்மன் கோவிற் பிரதான குரு பிரமஸ்ரீ. கி. நடராஜக் குருக்களின் இரண்டாவது மைந்தரான இவர் ஐந்து ஆண்டுகளாக தருமபுரம் ஆதீன வேதசிவாகம பாடசாலையில் வேதசிவாகமங்களிற் பயிற்சி பெற்றுச் சமீபத்தில் இலங்கை திரும்பியுள்ளார். இதுவே விஸ்வ வித்யா பீட முதல் நியமனமாகும்.

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் வைமன் வீதியில் வீதி முகப்பில் 2 1/2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. விரும்புவோர், இல 10, வைமன் வீதியில் விசாரிக்கவும். 73

ரீகல் (யாழ்ப்பாணம்)
REGAL — JAFFNA
From Friday 27th March 1964
Daily at 4-45, 7-00 & 9-45 p. m.
Morning Shows
Sat & Sun at 10-30 a. m.
● Basil Rathbone
● Anne Helm
IN
THE
MAGIC SWORD
(Eastman Colour) 81

## தமிழ் ஊழியர்கள் கவலை

அநுராதபுரம், வெள்ளி

"சிங்களத்தில் வேலைசெய்ய முடியாதவர்களை எவ்விதமாகவும் தொல்லைபபடுத்த வேண்டாமென்று அண்மையில் நிதி மந்திரி சகல இலாகாத் தலைவர்களுக்கும் அனுப்பியதகக் கூறப்படும் சுற்றறிக்கைக்கு மாறான கருமங்கள் அனுராதபுரம் கல்விக் காரியாலயத்தில் நடைபெறுவதாகக் கூறப்படுகிறது. நிதிமந்திரியின் சுற்றுநிருபத்தில் மனந்தேறிய தமிழ் ஊழியர்களை நிர்வாகப் பிரிவிலுள்ள சிலர் தொல்லைப் படுத்துகின்றனராம்.

## ஆசிரியை இல்லை

அநுராதபுரம், வெள்ளி

பாலர் வகுப்புமுதல்பொதுக் கல்வித் தராதரப்பத்திர வகுப்பு வரையுள்ள கலவன் பாடசாலையில்ஆசிரியை இல்லை ஆண்களைக்காட்டிலும் பெண்களே கூடுதலாகக் கல்வி கற்கும் இப்பாடசாலை சூரிய காப்பத்தனை அரசினர் சிங்கள - தமிழ்க் கலவன் பாடசாலையின் தமிழ்ப்பிரிவு என்பது குறிப்பிடத்தக்கது

## மூதாட்டிக்கு 400 ரூபா அபராதம்

கொழும்பு, வெள்ளி

25 பங்கிட்டரிசிப் புத்தகம் வைத்திருந்ததாக, மருதானையை சேர்ந்த நல்லம்மா என்ற 80 வயது மூதாட்டி மீது குற்றஞ்சாட்டி தொடரப்பட்ட வழக்கு மாஜிஸ்திரேட் திரு. டீ. கியூ. எம். சிறிமானே முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

மரணவிசாரணையின் பின் மாஜிஸ்டிரேட் மூதாட்டிக்கு 400 ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார். அபராதம் கட்டத்தவறினால் 3 மாத கடுழியச் சிறைத்தண்டனையளிக்கப்படுமென்றும் மாஜிஸ்டிரேட் தெரிவித்தார்

## மிகப் பெரிய மகஜர்!

கொழும்பு, வெள்ளி

பாராளுமன்ற முறையை கவிழ்ப்பதற்கான முயற்சிக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி மிகப் பெரிய மகஜர் ஒன்றை அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கத் தீர்மானித்திருக்கிறது.

இம்மகஜரில் பத்து லட்சம் மக்களின் கையெழுத்தை சேர்க்கவும் திட்டமிடப்பட்டிருக்கிறது முதலாவது கையெழுத்து யூ. என். பி. தலைவா திரு. டட்லிசேனநாயக்காவால் இடப்படும்.

## மாலைதீவு: சுதந்திரம் விரைவில்பேச்சுக்கள்

லண்டன், மார்ச் 27

மாலைத்தீவின் சுதந்திரம் சம்பந்தமாக விரைவில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகும் என பிரிட்டிஷ் சாம்ராஜ்ய மந்திரி திரு. டங்கன் சாண்ட்ஸ் காமன்ஸ் சபையில் கூறினார். தொழிற்கட்சி அங்கத்தினர்கள் இது சம்பந்தமாகக் கேட்ட பல கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே இவ்வாறு அவர் கூறினார்.

## நகைத்திருட்டில் இருவர் கைது

கொழும்பு, வெள்ளி

35,000 ரூபா பெறுமதியான நகைகள் திருட்டு போனது சம்பந்தமாக பொலிசார் சந்தேகத்தின் பேரில் இருவரை கைது செய்துள்ளார்கள்.

இந்த நகைகள் பொலிஸ் உணவு விடுதிக்கு எதிரேயுள்ள வீட்டில் நேற்று முன்தினம் காலை திருட்டு போனது. திருடப்பட்ட நகைகளில் 12,000 ரூபா பெறுமதியான நெக்லஸ் ஒன்றாகும்.

மருதானையிலுள்ள ஒரு நகைக்கடையில் இந்த நகைகளில் ஒரு பகுதி கைப்பற்றப்பட்டது.

## தூதர்கள் மகாநாடு

(1-ம் பக்கத் தொடர்ச்சி

கலந்துகொண்டுள்ள இந்தோனேஷியப் பிரதிநிதி சில யோசனைகளைச் சமர்ப்பித்துள்ளதால் இந்த யோசனை மீதான விவாதம் நடைபெற நீண்டநேரம் எடுக்கலாமென்று எதிர்பார்க்கப்பட்டுள்ளது. கடந்த புதன்கிழமை தூது கோஷ்டியினர் தெரிவித்திருந்த யோசனைகளில் கருத்துவேற்றுமை நிலவியதால், அந்த யோசனைகளும் ஏற்றுக்கொள்ளப்படவில்லையென நம்பகமான மகாநாட்டு வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

கெய்ரோவில் நடுநிலைமை நாடுகளின் உச்சி மகாநாட்டைக்கூட்டு முன்னர்மந்திரிகள் கட்டமகாநாடொன்றைக்கூட்ட வேண்டுமென்று சில நாடுகள் தெரிவித்திருந்த யோசனைமீது நாளை சனிக்கிழமை விவாதம் நடைபெறும். இம்முக்கிய விஷயம் குறித்து மகாநாட்டுப் பிரதிநிதிகள் நாளை ஆராய்வார்கள். ஆனால் மந்திரிகள் கட்டத்தில் கூட்டமொன்றை நடத்த வேண்டுமென்ற யோசனைக்கு இந்தியா ஆதரவளிக்காதென நம்பகமான வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

நாளைய மகாநாட்டில், கூட்டறிக்கை நகலை உபகமிட்டி சமர்ப்பிக்கும். இதனுடன் சில முக்கிய விஷயங்கள் குறித்தும் நாளை விவாதிக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இருந்தபொழுதிலும் சகல விஷயங்கள் மீதான விவாதமும் நாளை சனிக்கிழமை முடிவடையாதென்று நம்பப்படுகிறது. இதன் காரணமாக மகாநாடு அடுத்த வாரமும் கூடலாமென்று கருதப்படுகிறது.

## இடதுசாரி கூட்டு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நான்கு அல்லது ஐந்து மந்திரிப்பதவிகள் அளிப்பதற்கு சுதந்திரக்கட்சி தனது விருப்பத்தைத் தெரிவித்ததாகவும் கடைசியாகக் கிடைத்த தகவலின்படி தெரிய வருகிறது.

சுதந்திரக் கட்சியின் அரசியல் நடவடிக்கை அடுத்த மாத முதல் பத்துத்தினங்களில் உச்சக்கட்டத்தை அடையுமென நம்பப்படுகிறது. அவசரகாலச் சட்ட கால எல்லை அடுத்த மாதம் 4-ம் திகதி என்பது குறிப்பிடத்தக்கது.

சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த முக்கிய தொழிற்சங்க வாதிகளான எட்மண்ட் சமரக்கொடி, பாலாதம்பு ஆகியோர் இக்கட்சியினர் சுதந்திரக்கட்சிக்கு ஆதரவளிப்பதற்கு ஏற்கனவே எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்கள் என்பது தெரிந்ததே.

# "சமய நூல்களை வெளியிட இலங்கையே சிறந்தது"

## சமய கருத்தரங்கில் மலாயா சைவசித்தாந்த தலைவர் பேச்சு

நல்லூர், சனி

"சைவசமய அபிவிருத்திக்கான நூல்களை இலங்கையில் அச்சிட்டு வெளியிடவேண்டும். இந்நூல்களுக்கு தமிழ்நாட்டை நம்பி இருக்கமுடியாத நிலை இன்று உருவாகியுள்ளது. பணம்படைத்தவர்கள் தருமங்கள் செய்வதுபோல நூல்களை வெளியிடும் பணியில் ஈடுபடவேண்டும்" என்று மலாயா சைவசித்தாந்த சங்கத் தலைவர் திரு.கா.இராமநாதன் வண்ணை நாவலர் பாடசாலையில் நடைபெற்ற கருத்தரங்கிற்குத் தலைமைவகித்துப் பேசுகையில் கூறினார்.

நேற்றிரவு நாவலர் பாடசாலை மண்டபத்தில் அகில இலங்கைச் சைவப்புலவர் பட்டதாரிகள் சங்கம், சமய அபிவிருத்தி பற்றி ஆலோசனை செய்வதற்காகச் சமயக் கல்விக் கருத்தரங்கத்தை நடத்தியது. இந்த வைபவத்தில் மலாயா சைவசித்தாந்த மகாசபைத் தலைவர் திரு. கா. இராமநாதனைக் கௌரவிக்குமுகமாகத் தேநீர் விருந்துபசாரமளிக்கப்பட்டது. திரு. இராமநாதனுக்கு சைவப்புலவர் பட்டதாரிகள் சங்கம் வாழ்த்துப் பத்திரம் வாசித்தளித்தது.

திரு. இராமநாதன் தொடர்ந்து பேசுகையில் இளைஞர்களிலும் பார்க்க முதியோருக்கே சமய அறிவு கற்பிக்கப்படவேண்டுமென்றும் இளைஞர்கள் சமயக் கல்வியில் ஆழமாகச் செல்லமாட்டார்கள், சிவஞானபோதம், சிவஞான சித்தியார், சிவப்பிரகாசம் ஆகிய மூன்று நூல்களும் கட்டாயம் படிப்பிக்கவேண்டுமென்றும் கூறினார்.

சமயக் கருத்தரங்கில் திருவாளர்கள் சி. உ. சோமசேகரம், மு. வைரமுத்து, ச. அம்பிகைபாகன், மு. வைத்திலிங்கம், வ. செல்லையா, நம. சிவப்பிரகாசம் வ. கந்தையா ஆகியோர் கலந்துகொண்டனர்.

## விளையாட்டுக் கழக கூட்டம்

யாழ்ப்பாணம், சனி

புனிதவளன் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் 22-3-64ல் மேற்படி கழக மண்டபத்தில் நடைபெற்றது. மேற்படி கூட்டத்தில் வருடம்தோறும் வழமைபோல நடாத்திவரும் கழகத்தின் ஆண்டு விழாவும், கழகத்தினமும் இம் முறையும் நடைபெறும் என தீர்மானிக்கப்பட்டது.

இம்முறை கழகத்தின் 16-வது ஆண்டு விழாவை மிக விமரிசையாகக் கொண்டாடுவதாகவும் விஷேச நிகழ்ச்சியாக "ஒன்றே குலம்" என்னும் பொருள்பற்றிக் கவியரங்கமும், வேறு நிகழ்ச்சிகளும் நடாத்துவதெனவும்கழகச்செயலாளர் தெரிவித்தார்.

## சுழிபுரம் கி. ச. புதிய உபதலைவர்

சுழிபுரம், வெள்ளி

சுழிபுரம் கிராம சபையின் மாதாந்தக் கூட்டம் சபைத் தலைவர் திரு. சு. கந்தசுவாமி ஜே. பி. தலைமையில் நடைபெற்றது. நடப்பு வருட உப தலைவராக 12-ம் வட்டார அங்கத்தவர் திரு. சு. தம்பிஐயினர் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார்.

## சமயச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், சனி

மானிப்பாய் இந்துக்கல்லூரியில் இன்று மாலை 6-30 மணியளவில் தென்னிந்திய சைவ சித்தாந்த மகா சமாசத் தலைவரும் கோலாலம்பூர் திருநெறிக் கழகத் தலைவருமான திரு. கா. இராமநாதன் 'சைவ சமயம்' எனும் பொருள் பற்றி சொற்பொழிவாற்றவிருக்கிறார். மானிப்பாய் இந்து சமய விருத்திச் சங்கம் இதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது.

## வைத்தியசாலைகள் ஆரம்பிக்கப்படும்

கொழும்பு, வெள்ளி

சுமார் 150 உள்ளூர் ஆட்சி மன்றங்கள் ஆயுர்வேத வைத்தியசாலைகளை ஆரம்பிப்பதற்கான அனுமதியை உள்ளூர் ஆட்சிக் கமிஷனரிடம் கோரியுள்ளார்கள். இந்த வைத்தியசாலைகளை நடாத்துவதற்கு அரசாங்கம் உள்ளூர் ஆட்சி மன்றங்களுக்கு பணவுதவியளிக்கும்.

## தேசிய சேவைமூலம் விளையாட்டு மைதானம்

அநுராதபுரம், வெள்ளி

தேசிய சேவை மூலம் சூரிய காப்பத்தனை அரசினர் சிங்களத் தமிழ்க் கலவன் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்கள் தாங்கள் விளையாடுவதற்கான விளையாட்டு மைதானம் ஒன்றை அமைத்துவருகின்றனர். இவர்கள் 20 அடி உயரமான இடத்தைச் சமபூமியாக்கும் சிரமமான வேலையில் ஈடுபட்டுள்ளனர்.

## அனுதாபம் தெரிவிக்கப்பட்டது

யாழ்ப்பாணம், வெள்ளி

கதீஜா மஹா வித்தியாலயத்தையும் ஒஸ்மானியாக் கல்லூரியையும் உருவாக்கிய திருமதி ஹாஜா சல்மா அப்துல்காரின் மரணம் குறித்து யாழ். முஸ்லிம் சமூக சேவா சங்க நிர்வாகசபைக் கூட்டத்தில் அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

## கார் திருட்டு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னதும் உதவியுடன் சுன்னாகத்தில் பூபாலசிங்கம் என்பவருக்குச் சொந்தமான மோட்டார் கராஜில் திருட்டுப்போன சோமசுந்தரத்தின் மோட்டார் காரைக் கண்டுபிடித்தனர்.

**திருட்டுக்கோஷ்டி கைது**

இதைத் தொடர்ந்து பொலிசார் புலன்விசாரணை செய்துவந்தனர். இந்த விசாரணையின் பயனாக பலமுறை சிறை சென்றவரான கருணதாசா என்பவரும் சைக்கிள் மற்றும் பல திருட்டுக் குற்றங்களில் முன்புஅகப்பட்ட மார்ட்டினும், தங்கராசா என்பவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். இத்திருட்டு கோஷ்டிக்கு கருணதாசா தான் தலைவர் என்றும் கூறப்படுகிறது.

இக்கோஷ்டியைச் சேர்ந்தவர்களெனக் கருதப்படும் முன்பு பொலிசில் கான்ஸ்டபிளாக இருந்த அமரசேன என்பவரும் டன்னி என்ற பெயருள்ள மற்றொருவரும் தலைமறைவாக இருப்பதாகத் தெரியவருகிறது.

**மூன்று இடங்களில் உலாவினர்**

திருட்டுப்போன மற்றொரு மோட்டார்காரும் மோட்டார் கார் பகுதிகளும் கண்டுபிடிக்கப்பட்டன.

இத்திருட்டுக் கோஷ்டி கிளிநொச்சி, வல்வெட்டித்துறை ஊர்காவற்றுறை ஆகிய இடங்களிலும் நடமாடி வந்ததாகக் கூறப்படுகிறது.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு மார்ச் மாதம் 28-ம் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.